LIBRARIAN'S OFFICE
RECEIVED
31 MAY 2017
LIBRARY
UNIVERSITY OF JAFFNA

28 JUN 2017

2017 மே அணி 12 மடல் 9 விலை
ரூபா 20.00

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்

## 2017 சர்வதேச தொழிலாளர் தினம்









# அரசாங்கம் அடக்குமுறை போக்கில் மக்கள் விடுதலை முன்னணி எச்சிரிக்கிறது!

**மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் நாளுக்கு நாள் உக்கிரமடையும் சூழலில், மக்கள் அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் படி கோரி ஆர்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். இவற்றுக்கு முகம்கொடுக்க முடியாது அரசாங்கம் அடக்குமுறைப் பயணத்தை ஆரம்பித்திருப்பதாக மக்கள் விடுதலை முன்னணி எச்சரிக்கை விடுக்கிறது.**

அரசாங்கம் முன்னர் எடுத்துள்ள நடவடிககைகளையும் எதிர்காலத்தில் எடுக்கவுள்ள நடவடிக்கைகளையும் அவதானிக்கின்றபோது இது உறுதியாகின்றது.

கொழும்பு நகரத்தில் ஆர்பாட்டங்களில் ஈடுபடுவதற்குத் தனியான நாட்கள் மற்றும் தனியான இடங்களை ஒதுக்குவதற்கும் முடிவெடுத்துள்ள அரசாங்கம் ஆர்பாட்டங்கள், தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக பொதுமக்களுக்கு சேரவேண்டிய சேவைகள் குழறுபடியாகும் சந்தர்ப்பங்களில் தலையிடுவதற்கு அமைச்சர் சரத் பொன்சேக்காவுக்கு விசேட அதிகாரங்களை வழங்கி விசேட படையணியொன்றை அமைப்பதற்குத் தயார் என அரசாங்கம் அறிவித்துள்ளது. இதற்கிடையில் தமது பகுதிகளில் குப்பை கூழங்களைக் கொட்டுவதற்கு எதிராக மக்கள் முன்னெடுககும் கண்டன நடவடிக்கைகளை அடக்குமுறை செய்வதற்கு விசேட வர்த்தமானி அறிக்கையை வெளியிடுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

சயிட்டத்துக்கெதிரான ஆர்பாட்டங்களுக்கு தீர்வுகள் அற்ற அரசு திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்குத் தாரைவார்ப்பதற்கு எதிராகப் பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் மேற்கொண்ட தொழிற்சங்க

11ம் பக்கம் >>

**நீதியான தேசம்! நியாயமான சமுதாயம்! அடிமையில்லா மனிதன்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உங்கள் பணம் உங்கள் பிள்ளைகளுக்கு" துறைமுகத் தொழிற்சங்கத்தின் புலமைப்பரிசில்



"உங்களது பணம் உங்களது பிள்ளைகளுக்கு" என்ற தொனிப்பொருளின் கீழ் மக்கள் விடுதலை முன்னணியை சார்ந்த அகில இலங்கை துறைமுக பொது ஊழியர் சங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் துறைமுக கூட்டுறவு சங்கத்தின் அதிகாரத்தை கைப்பற்றிய நாள் முதல் ஒவ்வொரு வருடமும் அதன் அங்கத்தவர்களின் பிள்ளைகள் 5ம் ஆண்டு புலமைப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு எதிர்காலத்தில் அவர்களுடைய கல்வி நடவடிக்கைகளைச் சிறப்பாகக் கொண்டு செல்வதற்காக புலமைப் பரிசில் கொடுப்பனவுகள் சன்மானம் மற்றும் சான்றிதல்கள் ஆகியன வழங்கப்படுகிறது. 2016ம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவரும் மக்கள் விடுதலை முன்னணி அரசியற்குழு அங்கத்தவருமான கே.டீ. லால் காந்த தலைமையில் இடம்பெற்றது.

# சயிட்டத்துக்கு எதிரான தொழிற்சங்க நடவடிக்கைகள் வெற்றி!



சயிட்டம் பட்டப்படிப்பு விற்பனை நிலையத்தை மூடிவிடும்படி அரசை வற்புறுத்தி அரச தனியார் மருத்துவத்துறை, ஆசிரியர்கள், எரிபொருள் துறை, போக்குவரத்து துறை தொழிற்சங்கங்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர் அமைப்புகளின் கூட்டு தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அது வெற்றியளித்துள்ளதாக தனியார் மருத்துவக் கல்லூரி எதிர்ப்பு நிலையத்தின் இணைப்பாளர் தோழர் வைத்தியர் ஜயந்த பண்டார செஞ்சக்திக்கு தெரிவித்தார்.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக சுகாதாரத் துறை உள்ளிட்ட ஏனைய துறைகளின் நடவடிக்கைகளின் செயலிழப்புகள் காரணமாக மக்கள் முகம் கொடுக்கும் அசௌகரியங்களுக்கு அரசு முற்றாக பொறுப்பு கூற வேண்டும் என்பதோடு சிறுவர் மற்றும் புற்றுநோய் வைத்தியசாலைகளும் ஏனைய அத்தியாவசிய நிலையங்களில் இத்தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். வைத்தியத் துறையின் தரத்தை உறுதிபடுத்தும் வைத்திய சபையின் முடிவுகளுக்கு மாறாகச் சென்று நீதிமன்றத்தை பயன்படுத்தி தரம் குறைந்த "சயிட்டம்" வைத்திய பட்டத்துக்கு சட்டபூர்வமான அங்கிகாரத்தை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்த தன் காரணமாக நாட்டில் பயங்கரமான நிலை தோன்றியுள்ளது. இதனால் வைத்திய துறையின் தரத்துக்கும், இலவசக் கல்வித்துறைக்கும், நோயாளிகளின் உயிர்களுக்கும் பாரிய அச்சுறுத்தலான சயிட்டம் தனியார் நிறுவனத்தை மூடும் வரையும் இவ்வாறான ஒன்றிணைந்த போராட்டங்களை மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவித்தார்.

# "அக்கறையில் நாம்" அமைப்பின் மாநாடுகள் வெளிநாடுகளில்

**கனடா**



கடந்த 26ம் திகதி கனடா றொறொன்டோவில் "அக்கறையில் நாம்" விசேட மாநாடும் கலாச்சார நிகழ்வும் வெகு விமர்சையாக இடம்பெற்றது. இதில் "அக்கரையில் நாம்" அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தோழர் சுனில் ஹந்துன்நெத்தியும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துக் கொண்டனர். இதில் இனிய கலாச்சார நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு கனடாவில் வசிக்கும் இலங்கையர்களுக்காக சேவையாற்றிய கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் ஆகிய 20 பேர் கௌரவிக்கப்பட்டனர்.

**இத்தாலி**



இத்தாலி ரோம் நகரத்தில் மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் தோழர் அநுர திசாநாயக்கவின் தலைமையில் "அக்கரையில் நாம்" அமைப்பின் மாநாடு கடந்த ஏப்ரல் 16ம் திகதி இடம்பெற்றது. இதில் வெகுஜன அமைப்புகள், மதத் தலைவர்கள் உள்ளிட்ட பெரும்பாலான மக்கள் கலந்து கொண்டனர். இத்தாலி நாபொலி நகரத்தில் திறந்த வெளியரங்கிலும் மிலானோ, வர்சே நகரங்களில் இவ்வாறான மாநாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு இவற்றில் பெரும திரளான மக்கள் கலந்துகொண்டதும் குறிப்பிடத்தக்கது.

## கியுபாவுக்கு மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவு



பிலிப்பைன் மணிலா நகரத்தில் 19 வெளிநாடுகளின் 68 பிரதிநிதிகளும் 50க்கும் மேற்பட்ட பிலிபைன் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு கியூபாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவிற்குத் தலைமை தாங்கியது மக்கள் விடுதலை முன்னணி அரசியற் குழு அங்கத்தவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய தோழர் பிமல் ரத்நாயக்கவாகும். இவருக்கு யப்பான் புதிய சோஷலிச கட்சி, தென்கொரிய மற்றும் தாய்லாந்து கம்யூனிஸ்ட் கட்சிகளுடனும் பிலிப்பைன் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

## கனடா கம்யூனிஸ்ட் கட்சியைச் சந்தித்தல்



அண்மையில் கனடாவுக்குச் சுற்றுப்பயணத்தைமேற்கொண்ட மக்கள் விடுதலை முன்னணி அரசியற்குழு அங்கத்தவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தோழர் சுனில் ஹந்துன் நெத்தி அவர்களும் மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகர் அவர்களும் கனடா கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் தோழர் லீஸ் ரொவ்லே மற்றும் டொரொண்டோ அமைப்பாளரையும் சந்தித்து இரண்டு கட்சிக்குமிடையிலான நட்புறவைக் கட்டி யெழுப்பும் வகையில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டது. இந்நிகழ்வு கனடா டொரொண்டோ நகரத்தில் அமைந்துள்ள கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் வெளியீடு
464/20, பன்னிபிட்டிய வீதி, பெலவத்த, பத்தரமுள்ள.
Tel:0112-785612, E-mail niyamuwanews@gmail.com


## குப்பையும், ஜனாதிபதியும் முதலாளித்துவ ஆட்சிமுறையும்

எதிர்வரும் இரண்டு வாரங்களில் அரச உயர் பதவிகளில் மாற்றம் செய்யப்போவதாகவும் தமது ஜனாதிபதி அதிகாரத்தை பிரயோகிக்கப் போவதாகவும் ஒரு சில பிரச்சினைகளுக்கு தாம் கடுமையாக இருக்கப் போவதாகவும் ஜனாதிபதி அவர்கள் தெரிவித்துள்ளதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அப்போது ஜனாதிபதி அவசர வர்த்தமாணி அறிவித்தலொன்றை வெளியிட்டு உள்ளூராட்சி சபைகளால் குப்பைகளை அகற்றும் நடவடிக்கைகளை அத்தியாவசிய சேவையாகவும் குப்பைகளை அகற்றும் போது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்போரை நீதிமன்றத்துக்கு கொண்டு சென்று தண்டனை அளிக்கும் நிலமைக்குத் தாம் வந்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

குப்பைகளை சேர்த்தலும் அவற்றை அகற்றலும் அத்தியாவசியப் பணியென்பது உண்மையானாலும் ஜனாதிபதியின் வர்தமாணி அறிக்கையை சிறிய விடயமாகக் கருதமுடியாது. ஜனாதிபதி கடைசியாக தமது ஜனாதிபதி அதிகாரத்தை பயன்படுத்துவதற்கும் கடுமையாக செயற்படுத்துவதற்கும் ஆரம்பித்திருப்பது நாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்தியவர்களுக்கு எதிராக அல்ல. குப்பைகள் நிறைந்து காணப்படுவதால் பாதிக்கப்பட்டும் அச்சத்துக்கும் உள்ளாகியுள்ள அப்பாவி மக்களுக்கு எதிராகவே ஜனாதிபதி அதிகாரம் பாவிக்கப்படவுள்ளது. அதனால் ஜனாதிபதி தவறான பக்கத்திற்கு நகர்கின்றார் என்பதை குறிப்பிட்டாக வேண்டியுள்ளது.


தாம் வாழும் பிரதேசங்களில் பாரிய அளவிலும் முறையற்ற வகையிலும் குப்பைகள் மேடாக நிறைவதற்கு எதிராக மக்களிடையே காணப்படும் அச்சமும் எதிர்ப்பும் மிகவும் நியாயமானதாகும். முறையற்ற விதத்தில் குப்பை மேடுகள் நிறைந்தவுடன் அப்பிரதேசத்தில் மக்கள் வாழ்வது உகந்த விடயமல்ல. அதேவேளை சுகாதார சீர்கேடாகவும் அமைகிறது. மறுபுறத்தில் இன்னொரு மீதொட்டமுல்ல போன்ற அழிவு ஏற்படுமென்பதால் அதற்கான அச்சம் நியாயமானதாகும். அதனால் மக்களின் கருத்துக்களுக்கு செவிமடுத்துச் செயற்படுவதற்கு பதிலாக மக்கள் அபிப்பிராயத்தை அடக்குமுறையில் அடிபணிய வைக்கும் முயற்சி தவறானதாகும்.

கடந்த ஆட்சியின் போது மீதொட்டமுல்ல பிரதேசத்துக்கு குப்பைகளை கொண்டு வந்து குப்பை மேடு உருவாக்கப்பட்டபோது அதற்கு எதிராக மக்கள் போராடினார்கள். இப்போது ஏற்பட்டுள்ள நிலை அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தது சரியென்று நிரூபிக்கப்பட்டுள்ளது. அப்போதைய அரசாங்கம் ராஜபக்ஷ தலைமையில் ஆனதாகும். அவர்கள் காவற்துறையை பயன்படுத்தி அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்ட அதன் விளைவாக குப்பைமேடு சரிந்து பல உயிர்களையும், உடமைகளையும், வீடுகளையும் பறித்துள்ளது. இந்த அனுபவத்தின் மூலம் ஏனைய பிரதேச மக்களும் தமது குடியிருப்புகளின் அண்மையில் குப்பை மேடு உருவாக்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். மக்களுக்கு தெளிவுபடுத்தக் கூடிய வகையில் திட்டமிட்ட முறையில் விஞ்ஞான ரீதியான முறையில் குப்பைகளை அகற்றும் மீள் சூழற்சி போன்றவற்றை துரித நடவடிக்கைமூலம் அகற்றுவதற்குப் பதிலாக அவர்களின் வாழ்விடங்களை சனநடமாட்டம் அற்ற பகுதிகளை தேர்ந்தெடுத்து அடக்குமுறை மூலம் அவர்களை குடியேற்ற முயற்சி செய்யப்படுகிறது.

குப்பைகளை அகற்றுவதற்கு எதிரான மக்கள் போராட்டங்களை அடக்குவதற்காக விசேட வர்தமாணி அறிவித்தலை வெளியிடுவதற்கு ஜனாதிபதிக்கு இருந்த அவசரம் மீதொட்டமுல்லையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நஷ்டஈட்டை வழங்குவதில் அக்கறை இருக்கவில்லை. மக்களை மீளக்குடியேற்றுவது தான் பிரதான விடயமாகும். ஜனாதிபதி அதிகாரத்தை மீதொட்டமுள்ளையில் குப்பை மேடு அமைவதற்கு எதிராக பயன்படுத்தியிருந்தால் இவ்வளவு மக்கள் இறந்திருக்க நியாயமில்லை. குப்பைமேடுகளில் வியாபாரம் செய்வோருக்கு எதிராகவும் குப்பை அகற்றுவதில் இலஞ்சம் வாங்குவோருக்கு எதிராக குப்பைகளை மீள்சூழற்சி நடவடிக்கைகளுக்கு பெரும்தொகை லஞ்சம் கேட்டவர்கள் பற்றிய விசாரணை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்காது அவற்றை மறைக்கும் அரசாங்கம் மக்கள் தமக்கு உயிராபத்து ஏற்படுத்தும் குப்பை மேட்டுக்கு எதிராக கிளர்ந்துள்ள வேளையில் அடக்குவதற்கு தீர்மானம் எடுத்ததை வன்மையாக கண்டிக்கிறோம். ஆட்சியின் கையாளாகாத் தனத்தினால் நிர்வாகத்தின் மோசமான செயற்பாடும் தமது வர்க்கத்தின் குற்றவாளிகளை நடமாடவிட்டுள்ள அரசாங்கம் மக்கள் போராட்டத்துக்கு அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இன்னொரு வகையில் எமது நாட்டின் முதலாளித்துவ அமைப்பு முறை அழுகிய குப்பைமேடாக மாறிவருகின்றது. இலங்கை மக்களாகிய நாம் முதலாளித்துவ குப்பைமேட்டை இல்லாதொழிப்பதற்காகவே போராட வேண்டும்.

## தமிழ்ப் பிரதேசங்களின் போராட்டங்களும் சுயநல அரசியல்வாதிகளும்



தமிழ்ப் பிரதேசங்களின் உண்மையான பிரச்சினைகளை மூடிமறைக்கும் செயற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றதா? என்ற கேள்வி இன்று மக்கள் மத்தியில் பிரதான கேள்வியாகவுள்ளது. தமிழ் மக்களில் பெரும்பான்மையான மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் துயர வாழ்வு வாழ்ந்து வருவதையும், தொழில்கள் அருகியிருப்பதையும் முதன்மைப்படுத்த முடியாத அல்லது தெரியாத அரசியற் தலைமைகள் தமிழ்த் தேசியத்தின் பேரால் அதிகாரம் பெற்றுக்கொள்ள விழைகின்றனர். தமிழ்த் தொழிலாள, விவசாய, மீன்பிடி ஆகிய துறைகளுக்கான அரசியல் வழிகாட்டல்கள் எதனையும் முன்னிலைப்படுத்த முடியாத அரசியற் தலைமைகள் புதிய புதிய உத்திகளைக் கையாண்டு தமிழ் மக்களைத் திசை திருப்ப முனைகின்றனர்.

நில மீட்புக்கான போராட்டங்கள், வேலையில்லாப் பிரச்சினைக்கான போராட்டங்கள், படையினரிடம் யுத்தத்தின் பின்னர் கையளிக்கப்பட்ட பிள்ளைகளை மீட்பதற்கான போராட்டங்கள் தமிழ் மக்களால் நடத்தப்பட்டு வருகின்றது. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிப் பாத்திரத்தை வகிக்கும் த.தே. தலைமை இரண்டு வருடங்கள் கழிந்த பின்னரும் ஆட்சியினருடன் ஒட்டிக் கொண்டு அவர்களின் ஆட்சிக்கு முட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர் ஆட்சியினருக்கு இவர்களின் தேவை இருந்தாலும் இல்லாவிட்டாலும் இரண்டும் ஒன்றே. ஏனெனில் இரண்டு மேட்டுக்குடிக் கட்சிகளும் ஒன்று சேர்ந்த ஆட்சியில் தமிழ் மேட்டுக்குடிக்கட்சியினால் வீரம்பேசவோ, கோரிக்கை விடுக்கவோ, அரசுக்குப் பயம் காட்டவோ திராணியற்ற நிலையே இருக்கின்றது. மக்கள் விடுதலை முன்னணியில் ஆறு உறுப்பினர்கள் இருப்பினும் அவர்கள் நாட்டு நலனுக்காக எடுக்கும் எந்த எதிர்ப்பு நடவடிக்கையாயினும் வலிமையுள்ளதாக இருக்கின்றன. அவர்களை நாட்டு மக்கள் உணர்ந்து வருகின்றனர். தமிழ்த் தேசியத்தலைமை தமிழ் மக்களின் பிரச்சினை வேறு என்று மக்களுக்குக் காட்டுவதற்காக மக்கள் விடுதலை முன்னணியின் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டதில்லை.

இவர்களை எதிர்கட்சி ஆக்குவதற்குப் பூரண ஆதரவு வழங்கியதோடல்லாமல் பாராளுமன்ற சம்பிரதாயங்கள் மீறப்பட்டால் தாம் வீதியில் இறங்கிப் போராடப்போவதாகவும் மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பத்திலேயே அறிவித்திருந்தது. பாராளுமன்றத்தில் ஆறுபேர் கொண்ட கட்சிக்கும் ஆளும் கட்சிகளும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியும் பணிந்துள்ளன. இந்த வரப்பிரசாதத்தைப் பெற்றுக்கொண்ட தமிழ்த் தலைமை நாட்டின் உண்மையான பிரச்சினைகளுக்கான போராட்டங்களிலாயினும் தமிழ்ப் பிரதேசங்களின் பிரச்சினைகளுக்கான போராட்டங்களிலாயினும் முகம் கொடுத்த வரலாறு எதுவுமேயில்லை. சம்பிரதாயத்திற்கு யாரேனும் ஒருவர் பஜிறோ வாகனத்திற்சென்று சுகம் விசாரித்து விட்டுத்திரும்பி வருவர் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக்குழு உறுப்பினர்கள் மக்களுடன் நின்றே போராடி வருகின்றனர்.

தமிழ் மக்களுக்கான அடிப்படைப் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமேயுள்ளன. நாட்டு மக்களில் 80 சதவீதமான மக்களின் வாழ்வும் வருங்காலத்தில் கேள்விக்குறியாக மாறி வருகின்றது. தேசிய வருமானம் ஏற்கனவே வீழ்ச்சி கண்டுள்ளது. கடந்த ஆட்சியாளரும் தற்போதைய ஆட்சியாளரும் கடன்படுவதில் யார் வல்லவர் என்று போட்டியிடுகின்றனர். இவர்களுக்கு நிபந்தனையுடன் கடன் கொடுத்து மடக்குவதற்கும் பல நாடுகள் நிறுவனங்கள் ஆகியன போட்டியிடுமோ? ஏற்கனவே பெற்ற கடனுக்கு வட்டி கட்டுவதற்கு முடியாத வறிய நிலைக்கே மக்களைத் தள்ளியுள்ளனர். எந்த இன மக்களுக்கும் இது உரியது. இதை உணர்ந்து கொள்ள முடியாத தமிழ்த் தலைமை அதிகாரம் பெற்றால், தேனும் பாலும் ஓடச்செய்ய முடியாது. அதுவும் மேட்டுக்குடி வர்க்கத்தினரால் தமது வர்க்கத்திற்கே நலன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். யுத்தம் முடிந்து எட்டு வருடங்களில் தமிழ்ப் பாமர மக்களின் வாழ்வில் எந்த மாற்றத்தையும் இவர்களால் பெற்றுக் கொடுக்க முடிந்திருக்கவில்லை. அரசையே அதை செய் இதைச் செய் என்று கேட்கின்றனர்.

விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் குடியேற சென்றால் அவர்களுக்கான உடனடி அடிப்படை வசதிகளைச் செய்யுமாறு அரசைக் கோருகின்றனர். அரசின் பானையில் சிறிதேனும் கிள்ளுவதற்குப் பானையில் எதுவும் இல்லை தங்களுக்குப் புலம் பெயர் தமிழர்களில் நம்பிக்கையிருந்தால் முதலுதவி ஏதேனும் செய்ய முன்வர வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஒற்றுமை" எதற்காக?யாருக்காக?




மேதினம் எனப்படும் சர்வதேச தொழிலாளர் தினம் நெருங்கியவுடன் ஒற்றுமை பற்றிய பல்வேறுவிதமான பேச்சுக்கள் அடிபடத் தொடங்கியுள்ளன. தற்போது அதிகாரத்திற்காக பிரிந்து நிற்கும் முதலாளித்துவ அரசியல் கட்சிகள் மேதினத்தில் ஒற்றுமையைப் பற்றிப் பேசுகின்றனர் இம்முறை மைத்திரி அணியின் மேதின சுலோகம் "ஐக்கிய மேதினம்" என்பதாகும். ஆனால் யதார்த்தத்தில் கட்சி இரண்டாகப் பிளவுப்பட்டு இருபுறங்களில் மேதினத்தை நடத்துவதும் அந்த இரண்டு பக்கத்திற்கும் மக்களை வரும்படி கேட்டு கட்சி அங்கத்தவர்களின் ஒற்றுமையைச் சிதைத்துள்ளனர். தற்போதைய அரசாங்கமும் கூட்டு ஆட்சி என்றே அழைக்கப்படுகிறது. அதாவது அது ஐ.தே.க - ஸ்ரீ.ல.சு.க கூட்டு ஆரசாங்கமாகும். ஒற்றுமை என்பது உண்மையான ஒற்றுமை அல்ல, அதிகாரத்திற்காக அமைக்கப்பட்ட வர்க்க ஒற்றுமையாகும். அரசாங்கத்தின் பிரதான இரண்டு கட்சிகளும் மக்களை ஒன்றுபடும்படி கேட்டுக்கொண்டு இரண்டு மேதினங்களை நடத்துகின்றனர். அதே போன்று நாட்டில் வங்குரோத்து அடைத்துள்ள இடதுசாரி பாணியில் தோற்றமளிக்கும் பல்வேறு சந்தர்ப்பவாத குழுக்களும் ஒற்றுமைப்பற்றிப் பேசுகின்றனர். அதனால் ஒற்றுமை என்பது யாருக்காக, எதற்காக? என்பதை புரிந்து கொள்வதற்காக இதில் நாம் அவதானத்தை செலுத்துகின்றோம். இலங்கையில் இன்னமும் கட்சி அரசியலே நிலவி வருகின்றது வர்க்கம் மட்டுமே ஆன அரசியல் அல்ல. வர்க்க அரசியல் கட்சி அரசியலுக்கு கீழேயே உள்ளது. முதலாளித்துவ வர்க்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அதிகாரத்தில் இருக்கும் பேராசை காரணமாகக் கட்சி ரீதியாகப் பிளவுபட்டிருந்தாலும் வர்க்கம் என்ற வகையில் ஒன்றாகவே உள்ளனர். முதலாளித்துவ முறைமையைப் பாதுகாப்பதில் அவர்கள் ஓரணியில் திரண்டுள்ளனர். முதலாளித்துவ முறைக்குப் பாதகம் ஏற்படுகின்றபோது அதனை பாதுகாப்பதற்காகவே ஒன்றாக செயல்படுகின்றனர். தற்போதும் கூட மேலோட்டமாக பரஸ்பரம் விரோதிகளாக செயற்பட்டாலும் அவர்கள் ஒரே வர்க்கம் என்ற வகையில் செயற்பட்டு வருகின்றனர். இலங்கையில் கடந்த காலங்களில் இடம் பெற்ற பாரிய ஊழல்

உழைக்கும் மக்களின் ஒற்றுமை விடயத்தில் தொழிலாளர், விவசாயிகள் ஒற்றுமையும் முக்கியத்துவம் வாய்ந்து காணப்படுகிறது. அதனால் நமது நாட்டில் உழைக்கும் மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் ஒற்றுமையைப் புரிந்துக்கொள்ள வேண்டி இருப்பது கட்சிகளுக்கிடையிலான ஒற்றுமையை அல்ல, முதலாளித்துவ ஆட்சிக்கெதிரான நமது வர்க்கத்தினுள் உள்ள ஒற்றுமைக்காகவே செயற்பட வேண்டும்.

மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான சுலோகத்தை முன்வைத்திருந்த தற்போதைய ஆட்சியாளர்கள் தற்போது அதற்கு எதிர் மாறாகவே செயற்பட்டு வருகின்றனர். சாதாரண மக்களில் ஒருவர் மோசடியில் ஈடுபடும்போது நடைமுறைபடுத்தப்படும் சட்டம் முதலாளித்துவ பிரதிநிதிகளுக்காக செயலற்றுபோன சட்டமாகவே உள்ளது.

ஓர் அமைச்சின் ஊழியரோ அல்லது தொழிலாளியோ சிறிய திருட்டு வேலையில் ஈடுபட்டால் அவருக்கு எதிராகச் செயற்படும் சட்டம் அமைச்சருக்கு எதிராக செயற்படுவதில்லை. வர்க்க அரசில் காரணமாகவே அது அவ்வாறு இடம் பெறுகிறது அதனால் தற்போதைய அரசியலில் நிலவும் வர்க்க அரசியலைப் புரிந்து கொள்வது ஒற்றுமையாருக்காக எதற்காக என்பது புரிந்து கொள்வது மிக முக்கியமானதாகும். இதன்போது இடதுசாரிக் கட்சியை உடைத்துக் கொண்டு சென்றவர்களும் ஒற்றுமைப் பற்றி பேசுகின்றனர். ஒற்றுமையை சிதைத்தவர்களும் பிரிவினையை ஏற்படுத்தியவர்களும் தற்போது ஒற்றுமை பற்றி பேசுவது கேலிக்கூத்தாகும். இடதுசாரித்துவக் கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது வர்க்க ஒற்றுமை அத்தியாவசியமானதாகும். ஆனால் அந்த ஒற்றுமை இடம் பெறவேண்டியது கட்சிகளுக்கு இடையே அல்ல வர்க்கங்களுக்கு இடையேயாகும்.

தற்போது உண்மையிலேயே ஒற்றுமை தேவைப்படுவது நமது வர்க்கமான ஒடுக்கப்பட்ட வர்க்கத்துக்காகும். அந்த ஒற்றுமை எதற்காக. நம்மை ஒடுக்கும் முதலாளித்துவ ஆட்சியை தோற்கடித்து தமது வர்க்கத்தின் ஆட்சியை அமைத்துக் கொள்வதற்காகவே ஆகும். ஒடுக்கப்பட்ட வர்க்கத்தில் ஒற்றுமையின்றி எதையும் பெற்றுக்கொள்ள முடியாது. உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்பது தொழிலாளர் தினத்தின் சுலோகமாகும். உண்மையான இடதுசாரிக் கட்சிகளின் சுலோகம் அதுவேயாகும். அதனால் உண்மையான இடது சாரிகளின் பணியானது கட்சிகளுக்கிடையில் ஒற்றுமையை கட்டி எழுப்புவதற்கூடாக வர்க்க ஒற்றுமையை கட்டி எழுப்புவதேயாகும்.

கட்சி அரசியல் நிலவும் முதலாளித்துவ நாடுகளைப் போன்றே இலங்கையிலும் முதலாளித்துவ வர்க்கமான ஆளும் வர்க்கம் இரண்டாகப் பிளவுப்பட்டு நமது வர்க்கத்தையும் இரண்டாகப் பிளவுபடுத்தி உள்ளது.

முதலாளி வர்க்கம் அதிகாரத்திற்காக 2,3 ஆக பிளவுப்பட்டிருந்தபோதிலும் முதலாளித்துவ முறையை முன்கொண்டு செல்வதில் ஒரே அணியிலேயே நிற்கின்றனர். அவ்வாறு முதலாளித்துவ முறையைக் கொண்டு செல்வதற்காகவும் அதைப் பாதுகாப்பதற்காகவும் அவர்கள் தமது முதலாளித்துவக் கட்சிகளின் நமது வர்க்கத்தைச் சார்ந்த மக்களைப் பிளவுப்படுத்தியுள்ளனர். வர்க்கத்தை ஒன்றிணைக்கும் பிரச்சினையின்போது இடதுசாரிகள் முகம் கொடுக்கும் பிரதானமான சவால் அதுவாகும். முதலாளித்துவ வர்க்கம் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை எவ்வாறு பிரித்திருக்கிறது.

முதலாளித்துவக் கட்சிகள் முதலாவதாக நமது வர்க்கத்தை முதலாளித்துவக் கட்சிகளில் இணைத்து அவர்களை அங்கத்துவர்களாக்கி வர்க்க ஒற்றுமையைச் சிதைத்து முதலாளித்துவ வர்க்கம் நமது வர்க்கத்தின் வாக்குகளால் ஆட்சிப்பீடமேறுகின்றனர். முதலாளித்துவத்தின் நெருக்கடியின்போதும் கூட நமது வர்க்கத்தை பிரித்து வைப்பதில் அவர்கள் வெற்றிக்கண்டுள்ளனர். மறுபுறத்தில் இலங்கையில் உழைக்கும் மக்களைத் தமது வேலைத்தளங்களில் தொழில் நிறுவனங்களில் தொழில் ரீதியாக பாகுபாடுக்குள்ளாக்கி தொழிற்சங்கங்களை அமைப்பதற்கும் இடமளித்துள்ளனர். அதன்போது முதலாளி வர்க்கமும் தொழிற்சங்கங்களை அமைத்துள்ளனர். உழைக்கும் மக்களை சுரண்டுகின்ற அவர்களை மிதித்து அடக்குமுறை செய்கின்ற முதலாளி வர்க்கமே உழைக்கும் மக்களை ஒன்றுசேர்த்து தொழிற்சங்கங்களை அமைப்பது நகைப்புக்குரிய விடயத்தைப் போன்றே அத்தொழிற்சங்கங்களில் உழைக்கும் மக்கள் அங்கத்தவர்களாக இணைந்து இருப்பது கவலைக்கிடமான விடயமாகும். உண்மையில் மேதினத்தில் திடசங்கற்பம் ஏற்கவேண்டியிருப்பது உழைக்கும் மக்களை ஒன்றுப்படுத்துவதற்காகும். அதற்காக தோழர் லெனின் கூறிய வாசகமானது "தொழிலுக்கோர் சங்கம்" தொழிலாளர் வர்க்கத்திற்கோர் ஒரு நிலையம் என்பதாகும்.

அதன் மூலமாகவே தொழிலாளர் வர்க்கத்தை ஐக்கியப்படுத்த முடியும். அந்த வாசகத்துக்கேற்ப இலங்கையில் உழைக்கும் மக்கள் மத்தியில் செயற்படுவது மக்கள் விடுதலை முன்னணியும் அதன் சோஷலிச தொழிலாளர் சங்கமும் ஆகும்.

உழைக்கும் மக்களின் ஒற்றுமை விடயத்தில் தொழிலாளர், விவசாயிகள் ஒற்றுமையும் முக்கியத்துவம் வாய்ந்து காணப்படுகிறது. அதனால் நமது நாட்டில் உழைக்கும் மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் ஒற்றுமையைப் புரிந்துக்கொள்ள வேண்டி இருப்பது கட்சிகளுக்கிடையிலான ஒற்றுமையை அல்ல, முதலாளித்துவ ஆட்சிக்கெதிரான நமது வர்க்கத்தினுள்

தொடர்ச்சி 11ம் பக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை ஒடுக்கும் ஆட்சியாளர்களுக்கு எதிராக நாம் அனைவரும் அணிதிரள்வோம்



மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் அனுர திசாநாயக்க

நாங்கள் இன்று வரலாற்றில் முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுகிறோம். நாங்கள் இன்று எடுத்த முடிவு தொழிலாளர்களை ஒரு கொடியின் கீழ் ஒன்று சேர்கலாம் என்று நம்புகிறோம். வேறு எந்தக் காலத்தையும் விட உழைக்கும் மக்களாகிய எம்மை ஒன்று சேர வற்புறுத்தியுள்ளது. வடக்கிலும், தெற்கிலும் தொழிலாளர்களாகிய எமது தினத்தைக் களியாட்டங்களை நடத்தும் நாளாக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக நாட்டில் எல்லாப் பாகங்களிலும் உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக நாம் இன்று அணிதிரண்டுள்ளோம். இவ்விடத்துக்கு வருகை தந்திருப்போர் வடபகுதியில் பாதிக்கப்பட்ட அநீதிக்குட்பட்ட மக்களேயாகும். நம் அனைவரது எதிர்பார்ப்பும் நீதி, நியாயம், சமத்துவம் போன்றவையாகும் ஆனால் ஆட்சியாளருக்கு அவற்றை பெற்றுக்கொடுக்க முடியாது.

பிரித்தானியா ஆட்சியாளர்கள் எமது நாட்டை விட்டுச்சென்று சுமார் 70 வருடங்கள் ஆகின்றன. அன்று அவர்கள் சென்ற சந்தர்ப்பத்தில் காணப்பட்ட நெருக்கடியை விட இன்று நாடு பாரிய நெருக்கடியிலுள்ளது. எமது நாடு பாரிய கடன் சுமையில் சிக்க வைத்துள்ளது. 1985ம் ஆண்டில் எமது நாட்டின் கடன்தொகை 13,000 ரூபா கோடிகளாகும். இன்று அத்தொகை பத்து லட்சத்து ஐம்பதாயிரம் கோடிகளையும் தாண்டியுள்ளது. அவ்வளவு பெரிய கடன் தொகையை பெற்று ஆட்சியாளர்கள் என்ன செய்துள்ளார்கள்? யுத்தம் முடிவடைந்ததன் பின்பு ஓமந்தையிலிருந்து காங்கேசண் துறை வரையும், மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையும் புகையிரத பாதையை புனரமைத்தார்கள். இதனை புனரமைப்பதன் ஆரம்ப கட்டத்தை ரயில்வே திணைக்களமே மேற்கொண்டது. ஓமந்தையிலிருந்து காங்கேசன்



துறைக்கான 155 கி.மீ. தூரத்துக்கு, மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையான 110 கி.மீ. தூரத்தையும் சேர்த்தால் 265 கி.மீ. க்கு அரசாங்கத்தின் மதிப்பீடு ஒரு கிலோ மீற்றருக்கு 4 இலட்சம் டொலர்களாகும். ஆனால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த ஒப்பந்தத்தை இந்தியாவின் இர்கோன் நிறுவனத்திற்கு வழங்கினார். அந்த ஒப்பந்தம் 1 கி.மீ. க்கு 22 லட்சம் டொலர்கள் மதிப்பீட்டிலேயே வழங்கப்பட்டது. 1400 கி.மீ. நிர்மாணிக்கக் கூடிய பணத்தினாலேயே 265 கி.மீ. புகையிரதப் பாதையை நிர்மாணித்துள்ளார்கள். அது மட்டுமல்ல அநுராதபுரத்திலிருந்து காங்கேசன்துறை வரையும் 27 புகையிரத நிலையங்களுக்கு சமிஞ்சை நிலையங்களை அமைப்பதற்கு இந்தியாவின் இர்கோன் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. 840 இலட்சம் டொலர் இதற்கு செலவாகியது. ஒரு புகையிரத நிலையத்துக்கு 31 இலட்சம் டொலர்கள் செலவாகியது. ஆனால் மதவாச்சியிலிருந்து வவுனியா வரையான 6 புகையிர நிலையங்களுக்கு சமிஞ்சை நிலையங்களை நிர்மாணிப்பதற்கு துணை ஒப்பந்தம் 15 இலட்சம் டொலர்களுககு வழங்கப்பட்டது. எனவே இந்த ஆட்சியார்கள் உண்மையான செலவைவிட 10மடங்கு செலவ்ழித்தே இவ்வளவு கடன் சுமையை ஏற்படுத்தியுள்ளார்கள்.

இன்று ஒரு வருடத்துக்கு அரசாங்கத்துக்கு கிடைக்கும் வருமானம் எதிர்வரும் வருடங்களில் கடன் தவணையையும் வட்டியையும் செலுத்துவதற்கு போதுமானதல்ல. எனவே எமது நாடு பிச்சைக்கார நாடாக மாற்றியுள்ளார்கள். ரணில், மைத்திரி, ரவி கருணாநாயக்க ஆகியோர் இன்று உலக நாடுகளுக்குச் சென்று கடன் கேட்கிறார்கள். எனவே இந்த ஆட்சியாளர்களுக்கு எமது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது.

எமது நாட்டு ஆட்சியாளர்களினால் பொருளாதாரச் சீரகேடு மட்டுமல்ல குற்றச் செயல்களையும் அதிகரிக்கச் செய்துள்ளார்கள். சட்டத்துறையை சீருலைத்துள்ளனர். நோய் நொடிகளை அதிகரித்துள்ளார்கள். 1993ல் முதன் முதலாவது சிறுநீரக நோயாளியை மதவாச்சி பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. அவருக்கு வயது 56. இன்று இந்நோய் நாடு முழுவதிலும் வியாபித்துள்ளது. கண்டுபிடித்த மருந்துகள் என்ன? செய்த ஆராய்ச்சிகள் என்ன? மக்கள் உயிரிழக்கிறார்கள். நாட்டின் சனத்தொகையில் 14சதவீதமானவர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதுமட்டுமல்ல தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடையே சந்தேகத்தை வளர்த்தார்கள். வைராக்கியத்தை விதைத்தார்கள். யுத்தமொன்றை மூட்டினார்கள் இவற்றையே இந்த ஆட்சியாளர்கள் எமக்கு வழங்கியுள்ளார்கள். எனவே ஒதுபோதும் இவர்கள் நாட்டை முன்னோக்கிச் கொண்டு செல்ல மாட்டார்கள் எனவே இம்முறையை மாற்றியமைக்க வேண்டும்.

இன்று நாம் யாழ்ப்பாணத்துக்கு வந்தது இவை தொடர்பாக பேசுவதற்காகும் எம்முன் உள்ள போராட்டம் எத்தகையது? சிங்களவரின் போராட்டம் தமிழர்களுக்கு எதிரான போராட்டமல்ல, தமிழர்களின் போராட்டம் சிங்களவர்களுக்கு எதிரான போராட்டமுமல்ல, நாங்கள் அனைவருக்கும் ஒரு போராட்டமே உள்ளது. நாங்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். எதற்காக? எம்மை வாட்டி வதைக்கும், எம்மை பிரிக்கும், எம்மை அநீதிக்குட்படுத்தும் இந்த ஆட்சியாளர்களுக்கு எதிராகவே ஆகும்.

எனவே நாம் யாழ்ப்பாணத்தில் வைத்த இந்தக் காலடி கண்டிப்பாக வடக்கிலும், தெற்கிலும், மேற்கிலும், கிழக்கிலும் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களையும் ஒருங்கிணைக்கும் முக்கியமான சந்தர்ப்பமாகும் என்று கூறுகிறோம். எமது தாய், தந்தையர் தங்களது ஜீவனோபாயத்தை கொண்டு செல்வதற்காக விவசாயத்துறையில் ஈடுபடுகிறார்கள். ஆனால் நல்ல விதைகள், உரமானியங்கள். மருந்துகள் நேரத்துக்குக் கிடைப்பதில்லை. அறுவடையை விற்றுக்கொள்ள முடியாது. விற்றாலும் அதற்கான நியாயமான விலை கிடைப்பதில்லை. எனவே இன்று வடக்கிலும் தெற்கிலும் விவசாயிகளுக்கு உரிய வருமானம் இன்றி பாதிக்கப்பட்டுள்ளார்கள்.


எமது பிள்ளைகளுக்கு தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற வேறுபாடின்றி சிறந்த கல்வியை பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிக்கிறோம். ஆனால் அந்த எதிர்பார்ப்புகள் திடீரென்று சிதைந்து போகின்றன. இந்த ஆட்சியாளர்களுக்கு அதை வழங்க முடியாது. வழங்கவும் மாட்டார்கள்.

அது மட்டுமல்ல சிறந்த சுகாதாரத்தையும் இவர்களால் வழங்க முடியாது என்பதை உறுதிபடுத்தியுள்ளார்கள். மலையகப் பகுதிகளிலும் நிலமை மிக்வும் மோசமாகவே காணப்படுகின்றது. இரத்தச் சோகை, மந்தபோசனம் போன்ற பிரச்சினைகளால் மக்கள் அவதிப்படுகின்றனர். இன்று கிழக்கில் வாழும் மக்கள் கடலுக்குச் சென்று மீனை பிடித்துக்கொண்டு வருகிறார்கள். தென் பகுதியை எடுத்துக்கொண்டால் அவர்களும் கடலுக்குச் சென்று மீனை பிடித்துக் கொண்டு வருகிறார்கள். ஆனால் வடபகுதியில் உள்ள மீனவர்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடையாது. இந்தியா இழுவைப்படகுகள் வந்து எமக்கு உரித்தான கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீனை பிடித்துச் செல்கிறார்கள். எனவே இதை மாற்றியமைத்து அபிமானத்துடன் வாழக்கூடிய ஒரு நாட்டை கட்டியெழுப்ப வேண்டும், அபிமானமிகு மக்களை கட்டியெழுப்ப வேண்டும். மக்கள் சார்பான ஒரு ஆட்சியை உருவாக்க வேண்டும். அப்பொறுப்பை ஆற்றுவதற்கே செயற்பட்டு வருகிறோம். அதற்காக நாம் அனைவரும் ஒன்றுபடுவது இன்றியமையாததாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "தேசிய ஒற்றுமை மற்றும் சமத்துவத்துக்க
# யாழ் மண்ணில் இடம்பெற்ற கூட்டு

மக்கள் விடுதலை முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளரும் மத்தியக்குழு உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரன்



30 ஆண்டகளாக யுத்தத்தால் வெந்த மக்களின் குரலாக ஒலிப்பதற்கு ஏற்பாடு செய்தத கூட்டு மேதினமே இதுவாகும். இதில் மக்கள் விடுதலை முன்னணி மட்டுமல்ல விவசாய சங்கங்கள், மீனவ சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள், தொழிற் சங்கங்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள், கலைஞர்கள் உள்ளிட்ட அனைவரும் அணித்திரண்டுள்ளனர். அதுமட்டுமல்ல வடமாகாணத்தில் அனைத்து மாவட்ங்களையும் பிரதி நிதித்துவம் செய்து தமிழ், முஸ்லிம், சிங்கள தோழர், தோழிகள் இங்கு வருகைத்தந்துள்ளார்கள். அத னால் இந்த முற்றவெளியில் நடத்தும் மேதினம் சரித்திரம் படைக்குமென்று கூறுகிறேன். இந்நாட்டிலுள்ள அரசியல்வாதிகள், பொதுமக்களை இன, மத, சாதி ரீதியாகப் பிரிப்பதற்கு ஒன்று கூடுகிறார்கள். ஆனால் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக அல்லது மக்களின் பிரச்சனைகளை பிரதிநிதித்துவம் செய்வதற்காக மக் களை அணிதிரட்டுவதில்லை. அதனால் வடமாகாணத்தில் வாழும் மக்களுக்கு தேசிய இன்பிரச்சனையைப் போன்று அன்றாடம் முகம்கொடுக்கும் ஏனைய பிரச்சனைகளும் உள்ளன என்பதை உணருவதற்காக நாம் செயற்பட்டு வருகிறோம். வடபகுதியில் உள்ள அனைத்து தமிழ் மக்களும் யுத்தத்துக்கு சார்பானவர்கள் என்று சிலர் சுட்டிக்காட்ட முயல் கிறார்கள். தமது இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்கு தென்னிலங்கையில் ஒரு சில அரசியல்வாதிகள் இனவாதத்தை விதைத்து வருகிறார்கள். இந்த குரூரத்தனமான அரசியல்வாதிகள் சிங்கள மக்களிடையே சிங்கள இனவாதத்தைக் கதைத்து சூ டேற்றி அந்த சூட்டில் குளிர் காய்வதற்கு முயற்சித்து மீண்டும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முனைகிறார்கள். எனவே யாழ்ப்பாணம் என்பது யுத்தம் செய்வோர் வாழும் இடமல்ல, 30வருடங்களுக்கும் மேலாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். யுத்தம் காரணமாக கோடிக்கணக்கான இழப்புகளை சந்தித்துள்ளார்கள். உயிரிழந்தவர்களின் பெற்றோர்கள் இன்றும் தவித் துக்கொண்டிருக்கிறார்கள். காணாம லாக்கப்பட்டவரை மீளத்தருமாறு அவர்களது உறவினர்கள் போரா ட்டங்களை நடத்தி வருகிறார்கள். யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின் அறிக்கைக்கு ஏற்ப 26,500 பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்கள் உள்ளன. 89,000 இற்கு மேற்பட்ட விதவைகள் உள்ளனர்.

தந்தையையும் தாயையும் இழந்த 28,000 பிள்ளைகள் பரிதவித்து வருகிறார்கள். யாருடைய ஆதரவுமற்ற 8000க்கு மேற்பட்ட முதியோர்கள் காணப்படுகின்றனர். அதுமட்டுமல்ல இன்றும் 50 வீதமானவர்கள் கொட்டில்களில் வாழ்கிறார்கள் என்று புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றது. அதேபோன்று முறைசார்ந்த அல்லது முறைசாராத 60 வீதமானவர்கள் கடன்காரர்களாக்கப்பட்டு உள்ளார்கள். முல்லைத்தீவின் நந்திக்கடலைப் பற்றி பேசுகிறார்கள். இன்று முல்லைத்தீவு மாவட்டம் வறுமை மிகுந்த மாவட்டமாகும். யுத்தம் முடிவடைந்து 8 வருடங்கள் கடந்தம் இப்பகுதிக்கான அபிவிருத்திக் கேள்வி குறியாகவே உள்ளது.

இந்த நல்லாட்சியிலும் அதற்கு முன் சர்வாதிகாரப் போக்கை கடைப்பிடித்த ராஜபக்ஷ ஆட்சியும் இம்மக்கள் பிரச்சனைகளுக்கு முகம்கொடுக்கும் நிலைக்கு பொறுப்புக் கூற வேண்டும். சுதந்திரம் பெற்று 69 வருடங்களாள இந்நாட்டை ஆட்சி செய்த அனைவரும் ஒரு வர்க்கத்தை சேர்ந்தோர் ஆகும். அவர்கள் மக்களது பிரச்சனையை தீர்ப்பதற்கு பதிலாக அவர்களது பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கே செய ற்பட்டார்கள். இன்றும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

வடபகுதியில் ஒரு சிறிய சம்பவம் நடந்தாலும் இதோ புலி வந்துவிட்டது, பிரிவினை வாதம் தலைத்தூ க்கியுள்ளது என்று மகிந்த ராஜபக்ஷ வெறிப்பிடித்துக் கூறுகின்றார். அதேபோன்று வடப் பகுதியிலும் ஒரு சிலர் இனவாதத்தை தூண்டிவிட்டு அதில் குளிர் காய்வதற்கு முயற்சித்து வருவதையும் மறுக்க முடியாது. இங்கு வாழ்கின்ற விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் பிரச்சனைகளை யாரும் கதைப்பதில்லை. ஆனால் இந்த ஒடுக்கப்பட்ட மக்களின் குரலை மேலோங்கச் செய்வதற்கு மக்கள் விடுதலை முன்னணியாகிய நாம் செயற்படுவோம்.

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியற்குழு உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான தோழர் சுனில் ஹந்துன்னெத்தி




இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள வர்களுக்கு மட்டுமல்ல இலங்கைவாழ் தமிழ், முஸ்லிம், சிங்களம், பர்கர், மலாய அனைவருக்கும் பெருமைமிக்க நாளாகும். 30 வருட யுத்தம் நடந்த இந்த மண்ணில் முதற் தடவையாக அனைத்து இனத்தவரையும் ஒன்றி ணைத்து யாழ் மண்ணில் செம் பதாகைகளை உயர்த்துவதற்கு எம்மால் முடிந்துள்ளது.

தொழிலாளர் தினம் என்பது வெறுமனே விடுமுறை நாள் அல்ல. தமது உரிமைகளுக்காக போராடும், குரலெழுப்பும், கதைக்கும் நாளாக உலகுக்கே பறைசாற்ற எம்மால் முடிந்துள்ளது. அதனை இப்பகுதியில் நடத்துவது குறித்து நாம் பெருமைப்படுகிறோம். இப்பகுதி மக்களின் பிரச்சினைகளுக்காக போராடுவதற்கு, குரலெழுப்புவதற்காக நாம் தலைமைதாங்குவதற்கு தயார் என்ற கருத்தை இப்பகுதி மக்களுக்கு நாம் வழங்கியுள்ளோம். அதற்கான ஆரம்பத்தை இன்று எடுத்துள்ளோம். ஆரம்பமே மிகமுக்கிமானது, ஆரம் பத்தை எடுப்பதே கடினமானது.

எம்மை இனரீதியாக, மதரீதியாக, மொழி ரீதியாக, பிரதேச ரீதியாக பிரித்துள்ள சூழலில் அவற்றை யெல்லாம் துடைத்தெறிந்து அனை வரும் ஓரணியில் நின்று போராட வேண்டும் என்று ஆரம்பத்தை நாம் எடுத்துள்ளோம். இதில் கலந்து கொண்ட அனைவரும் வரலாற்றில் மதிக்கத்தக்கவர்களாகும். வெகு விரைவில் முழு நாட்டிலும் செங்கொடிகள் உயர்த்தும் தினத்தில் இன்றைய தினத்தை அனைவரும் நினைவு கூறுவார்கள். நாங்கள் ஏணைய கட்சிகளுக்கு சவால் விடுக்கிறோம் முடியுமென்றால் இவ்வாறான மேதினத்தை நடத்தி காட்டுங்கள் என்று.

விவசாய சங்கங்களை பிரதிநிதித்துவம் செய்து உரையாற்றிய தோழர் பஞ்சலிங்கம்



இன்றைய காலகட்டத்தில் வடமாகாண விவசாயிகள் பலதரப்பட்ட பிரச்சினைகளை சந்தித்து வருகின்றார்கள். ஆனால் நாம் இந்த நாட்டைச் செழிப்புறச் செய்வதற்கு எவ்வளவோ பாடுபடுகிறோம். நாம் வெயிலோ, மழையோ, இரவோ, பகலோ என்று பாராது எமது உற்பத்திகள் பெருக்க வேண்டும் என்று, எமது நாளைய சமுதாயம் தழைத்தோங்க வேண்டும் என்று எமது உடலை, உழைப்பை, வியர்வையை சிந்தி வருகிறோம். ஆனால் எமக்குக் கிடைக்கும் பலன் என்பது மிகவும் அரிதாகவே கிடைக்கின்றது.

ஆட்சியாளர்கள் அபிவிருத்தி செய்துள்ளார்கள் என்று கூறுகிறார்கள். ஆனால் எமக்குத் தேவையான நீர்வசதியையோ மானியங்களையோ சரிவரப் பெற்றுக்கொடுப்பதில்லை. எமது உற்பத்திகளுக்கு உரிய விலையை வழங்குவதற்கு எது வித திட்டங்களுமில்லை. விவ சாயிகளை மேம்படுத்தும் வகையில் ஏதாவதொரு அபிவிருத்தி பணி யை அரசாங்கங்கள் மேற்கொண்டுள்ளார்களா? இன்று நாம் ஒரு வகையான அநாதைகளாகவே காலத்தைக் கடத்தி வருகிறோம். விவசாயிகளாகிய எம்டை வெறும் அற்பப் பொறுப்பாளர்களாக எண் ணியே ஆட்சியாளர்கள் செய ற்பட்டு வருகிறார்கள். எனவே நாம் அனைவரும் எமது உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காகப் போராட வேண்டியுள்ளது. இன்று இந்த செம் மேதினத்தில் எவ்வாறு நாம் இணைந்திருக்கிறோமோ அவ்வாறு இனம், மதம், மொழி வேறுபாடின்றி ஓரணியில் திரண்டு போரடுவோம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க்காக சோஷலிசம்"
# ட்டு மேதினம்

**அகில இந்திய போவர்ட் பிலொக் அமைப்பின் மத்தியகுழு உறுப்பினரும் சர்வதேச விவகார செயலாளருமான தோழர் ஜீ. தேவராஜன் அவர்கள்**



இன்றைய தினத்திலே நானும் எமது கட்சியின் மத்திய குழு உறுப்பினரான தோழர் ராம் மோகனும் கேரளாவிருந்து இங்கு வருகைத் தந்திருக்கிறோம். இன்று மக்கள் விடுதலை முன்னணி யாழ்ப்பாணத்தில் சிறப்பான மேதின ஊர்வலத்தையும், கூட்டத்தையும் நடத்துகிறார்கள். இன்று அமெரிக்காவில் மட்டுமல்ல யாழ்ப்பாணத்திலும் பாட்டாளிகள், தொழிலாளர்கள், விவசாயிகள் பொதுமக்கள் உயிரைத் தியாகம் செய்து போராடத் தயார் என்பதை காட்டியுள்ளீர்கள் எனவே இங்குள்ள நீங்கள் தொழிலாளர் தினத்தை கொண்டாடுவதற்கு மிகமிக உரிமையுள்ளவர்கள் ஆகும்.

இந்திய விடுதலை போராட்டத்தில் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ், பசும்பொன் முத்துராமலிங்க தேவர், வா.போ.சி சிதம்பரநாதன் போன்றோர் பிரித்தானிய அரசாங்கத்துக்கு எதிராக போராடி இந்தியாவில் மட்டுமல்ல ஆசியாவிலுள்ள அனைத்து நாடுகளின் சுதந்திரத்துக்காகவும் போராடிய கட்சியான அகில இந்திய போர்வட் பிளொக் அமைப்பு சார்பாகவே நான் இங்கு வருகை தந்துள்ளேன். உங்களுடைய பிரச்சினைக்காக இங்கு செங்கொடி உயரும்போது உங்களுக்காக இந்தியாவிலும் நாம் போராடத் தயார் என்ற செய்தியை உங்களுக்கு வழங்குவதற்காகவே நாம் இந்த கூட்டத்தில் கலந்து கொள்கிறோம்.

தமிழ் மொழி மீதுள்ள பாசம், உலகிலுள்ள அனைத்துப் பாட்டாளிகள் மீதுள்ள பாசம் போன்ற காரணங்களாலும் நாம் இவ்வாறான நிகழ்வுகளில் கலந்து கொள்கிறோம். இன்று அனைத்துப் பாட்டாளிகளும் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காகப் போராடிக்கொண்டுள்ளார்கள். அவர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு இந்தியா, இலங்கை, கியூபா, பிரித்தானியா என்ற வேறுபாடில்லை; இந்திய விவசாயிகளின் பிரச்சினையும் இலங்கை விவசாயிகளின் பிரச்சினையும் இரண்டு அல்ல ஒன்றுதான். பாட்டாளிகள் முதலாளித்துவத்துக்கு எதிராகப் போராடிக் கொண்டு வருகிறாகள். உங்களுடைய போராட்டத்தில் நாங்களும் பங்காளர்கள் என்று உணர்த்துவதற்கே இந்த ஊர்வலத்திலும் கூட்டத்திலும் கலந்து கொள்கிறோம்.


நான் ஊர்வலத்தில் வரும் போது இனவாதமில்லாத, இனபேதமில்லாத இனிய நாடு உருவாக்க வேண்டும் என்ற கோஷத்தை செவிமடுத்தேன். ஆமாம் நாமும் அந்த இனிய நாட்டை கட்டியெழுப்புவதற்காகவே கனவு காண்கிறோம். இந்தியாவிலும் இனவாதத்தை பரப்புவோர் உள்ளனர். ஏனென்றால் இனவாதத்தை பரப்பினால் மக்களின் உண்மையான போராட்டங்களை திசைதிருப்ப அவர்களால் முடியும் என்று எண்ணுகின்றனர்.

இன்று மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும் இனவாதத்துக்கு எதிராகப் போராடுகிறார்கள். அனைவருக்கும் ஒற்றுமையாக வாழக்கூடிய ஒரு நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் இன்றும் சிறப்பான ஊர்வலத்தையும், கூட்டத்தையும் நடத்தி வருகிறார்கள். அதற்காக எமது ஒத்துழைப்பை என்றும் வழங்கத் தயாராக உள்ளோம் என்று கூறி விடைபெற விரும்புகிறேன்.

**கியூபா கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் தோழர் அபெலாடே சோசா**



**பிரித்தானியா கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் தோழர் ஷம்மி இப்ராகிம்**



**அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் செயலாளர் கமலேஸ்வரன் அவர்கள்**



இன்று வடமாகாணததிலுள்ள ஏழைமக்கள் எமது அமைப்பின் அங்கத்தவர்களாக உள்ளனர். அந்த மக்களைக் குறிப்பாக வட இலங்கையில் எவருமே மனிதர்களாக கருதுவதில்லை என்பது கவலைக்கிடமாக உள்ளது. அதன் செயலாளர் என்ற அடிப்படையில் பல முறைப்பபாடுகளை அறிந்து வைத்துள்ளேன். ஒரு ஏழைத் தொழிலாளியின் மகள் மிகவும் கஷ்டப்பட்டு படித்து பட்டதாரியாகி சமுர்த்தியிலே வேலைக்கு சேர்ந்துள்ளார். அவருடைய அர்ப்பணிப்பு காரணமாக கொழும்பு தலைமை காரியாலயம் அவருக்கு ஒரு பாராட்டை வழங்க முன்வந்தது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாத சமூக மேலாதிக்கவாதிகள் அந்தப் பிள்ளையை இல்லாத பொல்லாத குற்றச்சாட்டுக்களைக் கூறி வேலையில் இருந்து நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இதனை அந்த உத்தியோகஸ்த்தர் அரசாங்க அதிபருக்கு முறையிட்டார். அரசாங்க அதிபர் உள்ளிட்டோர் கூறுகிறார்கள் குற்றத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று வற்புறுத்துகிறார்கள். இவ்வாறு பல அநீதிகளை இன்று வடபகுதியில் வாழும் ஏழை மக்கள் அனுபவித்து வருகிறார்கள். இவற்றை நிறுத்த வேண்டும். நாங்கள் மக்கள் விடுதலை முன்னணியிடம் கேட்கிறோம் இவ்வறான அநீதிகளுக்கு எதிராக குரலெழுப்புங்கள் என்று. நாங்கள் அவர்களை நம்புகிறோம். ஏனென்றால் இன்று ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அவர்கள் போராடுகின்றார்கள்.

**அகில இலங்கை மின்சார ஊழியர் சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் மின் அத்தியட்சகர் செந்தில் அவர்கள்**



அமெரிக்காவில் இடம்பெற்ற சம்பவத்தின் அடிப்படையில் உருவாகிய மேதினம் இன்று இலங்கை வரையும் பரவியுள்ளது. மேதினம் என்பது தொழிலாளர்களுக்கு ஒரு மகிழ்ச்சியைத் தரக்கூடிய நாளாகும். உண்மையில் எமது நாட்டிலும் மின்சார சபையை எடுத்துக் கொண்டால் சுமார் 5000 பேர் நிரந்தரமாக்கப்படாத ஊழியர்கள் இருந்தார்கள். இவர்களுள் சுமார் 15 வருட காலமாக பணியாற்றியவர்களும் இருந்தார்கள். இவர்களை மனிதவலு ஊழியர்களாகவே அழைக்கப்பட்டார்கள். அவ்வாறிருந்த தொழிலாளர்களுள் சிங்களவர்கள், தமிழர், முஸ்லிம் என்ற வேறுபாடில்லாமல் இருந்தார்கள். அவர்களுக்காக போராடியது மக்கள் விடுதலை முன்னணியாகும். அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள், அவர்களது தொழிலை நிரந்தரமாக்கப் போராடியது மக்கள் விடுதலை முன்னணியே ஆகும். அது வெற்றியளித்து அந்தத் தொழிலாளர்கள் மிகவும் மகிழ்ச்சியாக இன்று உள்ளார்கள். அதனை பெற்றுக்கொடுத்தது மக்கள் விடுதலை முன்னணியாகும். இக்கட்சி ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடுவதில் ஒருபோதும் பின்நிற்க மாட்டாது. எவ்வித பாகுபாடும் பார்க்க மாட்டாது. எனவே தான் தொழிலாளர்களுக்காகப் பாடுபடும் ஒரேயொரு கட்சி மக்கள் விடுதலை முன்னணி என்று கூறுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண கடற்தொழில் இணையத்தின் தலைவர் N.V. சுப்பிரமணியம் அவர்கள்



அன்று இரத்தம் தோய்ந்த தினமாக நாங்கள் கேள்விப் பட்டாலும் இன்று தொழிலாளர்கள் நசுக்கப்படுகிறார்கள் என்பமே உண்மையாகும். தொழிலாளர்கள் என்பது சாதாரணமானவர்கள் என்று கருதுவதே வழக்கம். ஆனால் இந்த உலகமே தொழிலாளர்களின் கைகளிலேயே உள்ளது. என்பதே உண்மை தொழிலாளர் வர்க்கம் அவர்களது தொழில்களிலிருந்து விலகிக் கொண்டால் இந்த உலகிலே எதுவும் இயங்காது ஆனால் தொழிலாளர்கள் நசக்கப்படுகிறார்கள் அவர்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுப்பதற்கான செய்தியை இந்த தொழிலாளர் தினத்தில் வழங்கப்படுகிறது.

வடபகுதி மீனவர்களின் பிரச்சினையை பேசுவதற்கு இன்று மக்கள் விடுதலை முன்னணி எமக்கொரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளார்கள். குறிப்பாக இந்திய இழுவைப் படுகுகள் எல்லை மீறி எமது கடற்பரப்பில் மீன்பிடிக்கும் பிரச்சினை பூதாகரமாக தொடர்ந்தும் நடந்து வருகிறது. எங்களது வளங்களை அழித்து வாழ்வாதரத்தைச் சூறையாடி, எங்கள் தொழில் உபகரணங்களை அழித்துச் சென்று எமது வாழ்வியலைக் கேள்வி குறியாக்கியுள்ளது. எமது நாட்டு அரசாங்கமும் இந்திய நாட்டு அரசாங்கமும் ஒரு நாடகத்தையே ஆடி வருகின்றன.

1983 ஜுலை கலவத்துக்குப் பின்பு எமக்கு கடலுக்குப் போக முடியாத நிலை ஏற்பட்டது. 1987 கைச்சாத்திட்ட ஒப்பந்தத்துக்கு ஏற்ப இந்திய படையுடன் இந்திய ரோலர்களும் இங்கு வந்தது. பின்பு 2002 அமைதி காலகட்டத்தில் எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் நாம் மீன்பிடி உபகரணங்களை பெற்று கடலுக்குச் சென்றாலும் எமக்கு 'மீன்பிடிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை முழுக் கடற்பரப்பிலும் இந்தியா ஆக்கிரமித்து இருந்தது. பல்வேறு துயரங்களுக்க நாம் முகம்கொடுத்து வந்தோம். அன்றிலிருந்து போராட ஆரம்பித்திருந்தோம். இன்று சுமார் 15வருடங்கள் ஆகின்றது. 2004 ல் இந்திய மற்றும் இலங்கை மீனவர்களுக்கிடையில் பேச்சுவார்த்தையை நடத்தப்பட்டது. விடுதலை புலிகளின் காலகட்டத்திலும் மீன்பிடித் தொழில் இயற்கை வழங்களை அழிக்கின்றது, இதுவொரு கெடுதலான தொழில் என்று கூறி மாற்றுத் தொழில்களை செய்ய வேண்டும் என்று கூறி கொடுப்பனவும் வழங்கப்பட்டது. பின்பு 2010ம் ஆண்டு மீண்டும் இந்தியாவுக்குச் சென்று நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது நாங்கள் சுமத்திய குற்றங்களை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் அவர்கள் கால அவகாசம் கேட்டார்கள். இந்த இணக்கப்பாடு நீண்டநாட்களுக்குச் செல்லவில்லை. எமது நாட்டு அரசாங்கங்களும் இதில் கவனம் செலுத்தவில்லை. பின்பு நாம் பல வருடங்களாக போராடியதால் அரசு இப்பேச்சுவார்த்தை நடத்தினாலும் அவை ஏட்டிக்கு போட்டியாக முறிவடைந்தது. கடைசியாக கடந்த நவம்பர் மாதம் டில்லியில் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. இங்கிருந்து சென்ற 10 பேரில் தலைவனாக நானும் சென்றிருந்தேன். இதில் இருநாட்டிலிருந்தும் பலர் கலந்துகொண்டார்கள். எமது குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் கால அவகாசம் கேட்டார்கள் நாங்கள் மறுத்தோம். ஆனால் இன்னமும் அப்பிரச்சினை தீர்க்கப்படாத நிலையே காணப்படுகிறது.

அவர்களது இழுவைப் படகுகளை விடுதலை செய்வது குறித்தே பேச்சுவார்தவை செய்கிறார்கள். எமது பிரச்சினை அப்படியே உள்ளது. இது அரசியலுக்குள் முடங்கியுள்ளது. இது நொடிப்பொழுதில் தீர்க்கக் கூடியதொரு பிரச்சினை. மீன்பிடிப்பிரச்சினையைப் போன்று எமது சொத்துக்களை அழிப்பதற்கும், எமது வீடுகளை நொருக்குவதற்கும், எமது மக்களை ஊனமாக்கியதும் இந்தியாவே ஆகும். எமக்கு பொருத்தமற்ற நிர்மாணிப்பு பணிகளை செய்து கொடுத்து வருகிறார்கள் ஆனால் எம்மிடமிருந்து அள்ளிச் சென்ற வளத்துக்கு பதில் கூறுவதில்லை. இந்த இழுவைப் படகு பிரச்சினை இரண்டு அரசாங்கங்களும் முன்னின்று தீர்க்காவிட்டால், எவ்வித இளப்புகள் வந்தாலும் களத்தில் இறங்கிப் போராடுவதற்குத் தயார் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

## சிரேஸ்ட கலைஞரும் தேசம் பத்திரிகையின் பிரதான ஆசிரியரான அந்தனி ஜீவா அவர்கள்



இன்று யாழ்ப்பாணம் புதியதொரு வெளிச்சத்தை காண்கிறது. வேறு கட்சிகள் மேதினத்தை கேளிக் கூத்தாகவும், திருவிழாக்களாகவும் கொண்டாடி அதற்குரிய அந்தஸ்தை குறைத்துள்ள நிலமையையே கண்டுள்ளோம். இவ்வாறான நிலைமையில் மக்கள் விடுதலை முன்னணி தொழிலாளர்களையும் வேறு வெகுஜன அமைப்புகளையும் முறையாகக் அணிதிரட்டி தேினத்தை கொண்டாடி வருவது உங்கள் அனைவருக்கும் தெரிகின்றது. இன்று யாழ்ப்பாணத்தில் நடத்தும் இந்தக் கொண்டாட்டம் மிவும் முக்கியமானதாகும். வடமாகாணத்தில் உள்ள பல அமைப்புகளை ஒன்று திரட்டி இம்மேதினத்தை நடத்துவது வரவேற்கத்தக்கதாகும். தொழிலாளர்களின் ஒற்றுமைக்குக் கிடைத்த வெற்றியே இந்த மேதினமாகும். கார்ல் மாக்ஸ் கூறியுள்ளார், தொழிலாளர்களுக்கு இழப்பதற்கு ஒன்றுமில்லை என்றும் வென்றெடுப்பதற்கு முழு உலகமே உள்ளதென்று. அவர் கூறிய வாக்கு இன்று நிறைவேறிக் கொண்டு வருகிறது. இன்று செங்கொடிகள் பறக்காத நாடே கிடையாது. பல போராட்டங்களை ஒன்றுபட்டுப் போராடினால் எதையும் வெல்ல முடியும். இன்று பொதுமக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்காகக் குரலெழுப்பி வருவது மக்கள் விடுதலை முன்னணியே ஆகும். எனவே நீங்கள் தனிப்பட்டவர்கள் அல்ல. எமது போராட்டங்களுக்கு மக்கள் விடுதலை முன்னணி தலைமைதாங்கும் என்பதை மிகவும் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## முன்னாள் கல்வி அதிகாரியும் இடதுசாரி செயற்பாட்டாளருமான A.C.ஜோர்ஜ் அவர்கள்




இனிவரும் எல்லா மேதினங்களும் மக்கள் விடுதலை முன்னணியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மேதின நாட்களாகக் காணப்படும். நல்லாட்சியென்று கூறி பதவியேற்றுள்ள இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டால் மக்கள் விடுதலை முன்னணி ஒழுங்குப்படுத்தியுள்ள இந்த மேதினம் இலங்கை வரலாற்றில் இந்தப் பகுதிக்கும் வரலாற்று சம்பவமாக பதியப்படும். ஏனெனில் தேசம் தழுவிய உண்மையான தொழிலாளர்களுக்காக போராடுகின்ற ஒரு கட்சி ஒரு பகிரங்க மேடையிலும் சிறப்பான ஊர்வலத்தையும் யாழ் பிரதேசத்தில் நடத்தியது இதுவே முதற்தடவை ஆகும். மறுபுறம் சர்வதேச தொழிலாளர் தினம் என்ற கருத்தைப் புலப்படுத்தும் வகையில் முதற்தடவையாக பல்நாட்டு இடதுசாரி அரசியல்வாதிகளான இந்தியா, கியூபா, பிரித்தானியா போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துக்கொள்ளும் முதல் மேதினக் கூட்டமாகவும் இதனைக் கருதலாம். எதிர்காலத்தில் தொழிலாளர்கள் மிகமோசமான நிலைக்குத் தள்ளப்படுவார்கள். பத்து இலட்சம் பேருக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குவதாகக் கூறியே இந்த அரசு பதவிக்கு வந்தது. ஆனால் பட்டதாரிகள் எல்லா மாவட்டங்களிலும் கண்டன நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். வேலைவாய்ப்புகள் இல்லை. இவர்கள் அனைவரையும் ஒன்றுத்திரட்டி அகில இலங்கை ரீதியாக போராடும் வல்லமை மக்கள் விடுதலை முன்னணிக்கே உள்ளது. அதற்கான ஆரம்பப் படியாக இந்தக் கூட்டத்தை இந்த இடத்தில் ஏற்பாடு செய்ததற்கு எனது நன்றியை மக்கள் விடுதலை முன்னணிக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியின் வருகையும்! மலையகத்தின் எதிர்காலமும்!





இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தற்போது இலங்கைக்கு வருகைத்தந்துள்ளதை ஊடகங்கள் ஒரு புறம் ஊதிப்பெருக்கினாலும், மலையகத்து ஜாம்பவான்கள் முட்டிமோதிக் கொண்டாலும், இலங்கை வாழ் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் எவ்விதமான மாற்றத்ததையும் ஏற்படுத்தப் போவத்தில்லை என்பதே எமது கருத்தாகும்.

குறிப்பாக மலையக மக்கள் மோடியின் வருகையை எண்ணி ஏக்கப் பெருமூச்சோ எதிர்காலத்தில் ஏதோ பெரிய நல்ல மாற்றம் ஏற்படப்போவதாக எண்ணுவதோ மிகப் பெரியத் தவறாகும். ஏனெனில் அவ்வாறு தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் இந்தியத் தலைவர்களின் வருகையால் கடந்த பல தசாப்த காலத்தில் எவ்விதமான மாற்றமும் ஏற்பட்டதாக வரலாறு எமக்கு எவ்வித படிப்பிணையையும் காட்டவில்லை.

இதற்கு முன்னர் பாரத பிரதமர் நேருவின் வருகை தொண்டமானை பெரியக்கங்காணி என்ற நிலையில் இருந்து அரசியல் தலைவன் என்ற உச்சிக்கு கொண்டு சென்றது. நேருவின் வருகையில் 1939 இல் இலங்கை இந்தியக் காங்கிரஸ் உருப்பெற்றது. பின்னர் படிப்படியாக இலங்கை தொழிலாளர் காங்கிரசாக உருமாற்றுப் பெற்று இலங்கை வாழ் மலையக மக்களைத் தொழிற்சங்க அடிமைகளாக்கியது. உரிமைக்குப் பதிலாக சலுகைக்கு கையேந்த வைத்தது. இன்று வரையும் அதே நிலைமை எம்மை ஆட்டிப்படைக்கிறது. அதன் பிறகு இலங்கைக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு இந்தியத் தலைவர்களின் விஜயங்களும்/ அத்துமீற்களும், தலையீடுகளும் பல்வேறு சந்தர்ப்பத்தில் இருந்த போதும் அது அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக இலங்யையிலும் குறிப்பாக தமிழ் பேசும், மற்றும் இந்திய வம்சாவழிகளான தோட்டத் தொழிலாளர்களையும் பாதித்துள்ளதே தவிர மறுமலர்ச்சியை ஏற்படுத்தவில்லை. அந்த இடத்தில் இருந்து நோக்கும் போது மோடியின் வருகைக்கு உரிமைக்கோரி குடுமிச் சண்டை பிடிக்கும் மலையகத் தலைவர்களால் மோடியினூடாகவோ அல்லது இந்திய அரசாங்கத்தினூடாகவோ மாற்றத்தை ஏற்படுத்திக் கொடுக்க முடியாது என்பதே உண்மை.

**பெருந்தோட்ட மக்களின் வீட்டுப் பிரச்சனை**

தோட்டத் தொழிலாளர்கள் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் கட்டப்பட்ட 225,000 லயக் குடியிருப்புக்களிலேயே இன்னும் வாழ்ந்து வருகிறார்கள். அதில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில தனிவீடுகள் அமைக்கப்ட்டாலும் முழுமையானத் தீர்வை எட்டவில்லை. மாறி மாறி வரும் அரசாங்கங்களிடம் வீடமைப்புக்கான திட்டமான கொள்கையொன்றும் இல்லாததால் தோட்டத் தொழிலாளர்கள் காணிக்கு சொந்தக்காரராகவும், சொந்த வீட்டை கட்டவும் அடிப்படை உரிமையை இழந்தும் இருக்கின்றனர்.

புதிதாகக் கட்டப்பட்ட குடியிருப்புக்கள் தோட்டத் தொழிலாளர்களின் சுமையை மேலும் கூட்டியுள்ள புதிய வீட்டுக்கு மேலதிக தொகை செலுத்த வேண்டியுள்ளதுடன் வீட்டுக்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளதோடு அரை அடிமை நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. வீட்டைக் கட்ட கடன் வாங்க நிர்பந்திப்பதோடு ஒப்பந்தக்காரர்களால் வீடு முழுமையாக்கப்படாது பாரிய வட்டியையும் செலுத்த வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளது. இந்தத் தொகை அவர்களின் மாதச் சம்பளத்தில் 650 இல் இருந்து 1000 ரூபா வரை 10 முதல் 25 வருடங்கள் கழிக்கப்படுகிறது.

இந்த வீடமைப்புத் திட்டத்திற்கு 45 வயதுக்குட்பட்டவர்கள் உள்வாங்கப்படுவதில்லை. ஆரம்பத்தில் 20 பேர்ச்சஸ் காணிகள் என்ற போதிலும் 7 பேர்ச்சஸ் காணிக்கே வறையறுக்கப்பட்டது. இரண்டு மாடிக் கட்டடங்களில் 1.2 பேர்ச்சஸ் மாத்திரமே கிடைக்கப்பட்டுள்ளது.

(TRUST) ட்ரஸ்ட் நிறுவனம் புதிய வீடமைப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தி இருந்தாலும் அது மந்தக் கதியில் நகர்வதால் அதனூடாக பயன் பெறுவோர் 10% மானோரே, ஏனைய 90% பழைய முறையிலேயான 100 வருட குடியிருப்புக்களில் வாழ நிர்பந்திக்கப்படுவர். (PDSP) பெருந்தோட்ட உதவி அபிவிருத்தித் திட்டத்தினால் அதாவது நெதர்லாந்த அரசாங்கம் 65%, நோர்வே அரசாங்கம் 35%. அதாவது 1.320 மில்லியன். கம்பனிகள் பங்களிப்பு 154 மில்லியனும் தோட்டத் தொழிலாளர்கள் பங்களிப்பு 307 மில்லியனும் சேரும். வங்கிப் பங்களிப்பு 670 மில்லியன் வங்கி பங்களிப்புக்கு தொழிலாளர்கள் வட்டியுடன் மீள் பங்களிப்பு செய்ய வேண்டும். இந்நிலைமை தோட்டத் தொழிலாளர்களை மேலும் கடனாளியாக்குகின்றது. கடனை செலுத்த முடியாத சந்தர்ப்பத்தில் தமக்கு இறுதியாக இருக்கும் EPF இல் 30% தை விடுவிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள்.

எனவே சிறு வீட்டுத்திட்டம் என்ற நவீன கோட்பாடுடைய திட்டத்திற்கு தமது தொழிற்சங்க ஆதிக்கத்தை பயன்படுத்தி TRUST நிறுவனத்தை தமது அரசியல் தொழிற்சங்கத் தேவைக்கு பயன்படுத்தினார்கள். தற்போதும் அதே நிலைமை முன்னர் பேயிடமிருந்த இந்த பொறுப்புக்கள் தற்பொழுது பிசாசிடம் கைமாற்றப்பட்டுள்ளன. இந்த மலையக பேய், பிசாசுகளிடம் மலையக மக்களை மீட்பதற்கான திட்டங்கள் எவையும் இல்லை.

தற்போது மோடியின் வருகையால் தமக்கு உரிமையாக்கி குடுமியைப் பிடிப்பதை விட்டு முடியுமானால் இந்தியப் பிரதமர் மோடிக்கு சவால் விடுக்க வேண்டும். குறிப்பாக இந்திய வம்சாவளி தோட்டத் தொழிாளர்களின் வீட்டுப் பிரச்சனையைத் தீர்க்கும்படி, அதை விட்டு அரசியல் ஆட்சியதிகார அரவணைப்பில் இருந்துக்கொண்டு தமது இருப்புக்காக முட்டிப்போடுவது, அப்பத்தை சரிசமமாகப் பங்கிடும் குரங்கின் கதைக்குச் சமமாகும்.

நேருவின், ரஜீவின், மோடியின் வருகையின் பின்னணியில் இருப்பது வேறு எதுவுமல்ல 1977ம் ஆண்டில் இந்திய தேசம் சென்ற அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆரின் கருத்துக்கு அதாவது இலங்கை இந்தியாவின் மாநிலமாகும் என்ற கருத்துக்கு வலுசேர்க்கவே. அதற்கமைவாக நேரு அரசியல் ரீதியாக, ரஜீவ் அரசியல் ரீதியாக, மோடி அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாகவே மூக்கை நுழைத்துள்ளனர். அதற்கு சமாந்திரமாகவே “எட்கா” என்ற உடன்படிக்கை ஒருபுறம் காத்திருப்பதுடன் எமது நாட்டு வளங்களை சூறையாடுவதற்கும் 25 வருட உப குத்தகைக்கு தோட்டக் காணிகளை வழங்குவதற்குமான திட்டங்களை துரிதப்படுத்துவதற்குமேயன்றி மலையக அல்லது இலங்கை வாழ் மக்களின் மீது இந்தியா காட்டும் கரிசனை அல்ல என்பதை குறிப்பாக எமது நாட்டு மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். எனவே மோடியின் வருகை என்பது புதிய மொந்தையில் பழையக் கள்ளுதான்.

# இ.தொ.காவின் புதிய பயணம் எங்கே செல்லும்

மலையகத்தின் உழைக்கும் வர்க்கத்திற்கான மேதினம் என்று சொல்லப்பட்ட மேதின நிகழ்ச்சிகளில் ஒன்று இ.தொ.காங்கிரஸ் கட்சியினால் கினிகத்தேனை பஸ் நிலையத்திற்கருகில் நடத்தப்பட்டது. அம்மேதின நிகழ்வு ஸ்ரீ.ல.சு கட்சியின் பங்களிப்புடன் நடத்தப்பட்டது. மீன்பிடி அமைச்சர் மஹிந்த அமரவீர கலந்து கொண்டார். அவர் ஆறுமுகம் தொண்டமானை தாம் ஒருபோதும் கைவிட மாட்டோம். என்று கூறியது மட்டுமல்ல. அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியும் வழங்குவோம். என்றும் சூழுரைத்துள்ளார். 2020ம் ஆண்டில் நடைபெறும் தேர்தலில் தாம் ஆட்சியமைப்பதாகவும் ஆருடம் கூறியுள்ளார். இவர் சார்ந்துள்ள ஆட்சியில் மலையக மக்கள் ரூபாய் 1000 கோரிப் பாரிய போராட்டத்தைக் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நடாத்தியிருந்தனர் என்பது நாடறிந்த உண்மையாகும். தேசிய வருமானத்தில் 75 சதவீதத்திற்கும் மேலான வருமானத்தை ஈட்டித்தரும் தொழிலாளர் வர்க்கம் ஏதிலிகளாக இருக்க இ.தொ.க. தலைவருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள மந்திரிப் பதவி வழங்கினால் அவர்களின் பிரச்சனைகள் தீர்த்து விடும் என்ற மாயைத் தோற்றத்தைக் காட்டியுள்ளார் அமைச்சர்.

முதலாளிமார் சம்மேளனமும் தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டியின் தலைவர்களும் ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டு ரூபா 730 க்குள் தொழிலாளரை மடக்கிய சம்பவம் யாவரும் அறிந்ததே. அவர்கள் செய்யும் வேலையை இந்நாட்டில் எந்தத் தொழிலாளியும் செய்ய முடியாதென்பது வெள்ளிடைமலை. பனி வெயில், மழை இவைகளின் கொடூரங்களுக்குத் தாக்குப்பிடித்துத் தொழில் புரிபவர்கள் மலையகத் தமிழ் சிங்கள தொழிலாளர்களே. இவர்களுக்கு ரூபா 1000 மட்டுமல்ல அவர்களின் வீதிச் சீர்த்திருத்தங்கள் பாடசாலைகள் வைத்தியசாலைகள் ஆகியவற்றை ஏனைய மாவட்டங்களை விடவும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். இவைகளை எந்த முதலாளித்துவ மேட்டுக்குடி ஆட்சியாளரும் செய்யப் போவதில்லை மலையகத் தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்களே தமது வர்க்க நலன்களிலேயே கவனமாயிருக்கின்றனர் ஏழு பேச் காணி வீடு தருவதாகவும் மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

மலையக மக்களின் உழைப்பினால் கிடைக்கும் வருமானத்தை அவர்களுக்காகவே செலவு செய்யப்படவேண்டும். இதுவே பாட்டாளி வர்க்க சிந்தனையாகும். அவர்களின் வர்க்க மேம்பாட்டிற்காக உழைக்கும் தலைவர்கள் உருவானால் முதலாளி மார்

தொடர்ச்சி 11ம் பக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமலாக்கப்பட்ட உறவுகளின் துயரத்துக்கு பதில் எப்போது?

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நடத்தும் போராட்டங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் வேறு சில உறுப்பினர்களும் குரல் எழுப்பி வருகின்றனர். பாராளுமன்றத்தில் அரசாங்கம் நடத்தும் நல்லாட்சி என்று சொல்லப்படும் ஆட்சியினர் பதில் கூற முடியாமல் விழிக்கின்றனர். காணாமல் ஆகிகப்பட்டவர்களின் உறவினர் தமது பிள்ளைகளை படையினரிடம் கையளித்த விடயம் மட்டும்தான் அவர்களுக்குத் தெரியும். அரச படையினருடன் ஏற்கனவே இரகசிய உறவினைப் பேணி வந்துள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் எத்தனைப் பேர் என்பதனை இன்றுவரை தமிழ்த் தரப்பினர் அறிந்திருக்கவில்லை. அரசப் படையினரும் அதை வெளிப்படுத்திதப் போவதில்லை. விடுதலைப் புலி உறுப்பினர்களில் இடைநிலைத் தலைவர்களில் அநேகர் பற்றிய தகவல்கள் படையினருக்குத் தெரிந்திருந்த விடயத்தை யுத்தம் முடிந்தப்பின்னர் அவர்களைக் காணவில்ல என்றும் அவர்கள் தப்பிச் சென்றுவிட்தாகவும் அறிக்கை விட்டிருந்தனர்.



பணவசதிப் படைத்த பின்னணியுடைய விடுதலைப்புலிகளில் அநேகர் வெளிநாடுகளில் வசிப்பதாகவும் தமிழ் மக்கள் மத்தியில் தகவல்கள் உள்ளன. வர்க்க சமுதாயத்தில் இது நிராகரிக்க முடியாத விடயமாகும். இராணுவத்தில் இருந்து அப்போதைய அதிகாரிகள் கையூட்டுப் பெற்றுக்கொண்டு சிலரை விடுவித்ததாகவும் தமிழ் மக்கள் மத்தியில் கருத்து நிலவி வருகிறது. இதே நேரத்தில் இராணுவ உயர் அதிகாரிகளின் அடிமைகளாகவும் தமிழ்ப் பெண் போராளிகள் மாற்றப்பட்டிருந்ததாகவும் தகவல்கள் இருந்துள்ளன. அரச படைகளுடனும் விடுதலைப் புலிகள் சங்கமித்து விட்டதாகவும் தகவல்கள் உள்ளன. எனவே எல்லோரும் சிறையில் இருக்கிறார்கள் என்றோ, எல்லோரும் கொலை செய்யப்பட்டு விட்டனர் என்றோ, எல்லோரும் தப்பிச் சென்றுவிட்டனர் என்றோ தரவுகளைப் பெற அரசாங்கத்தினால் முடியாதுள்ளது. சில கைதிகளைப் பற்றிய தகவல்களைத் தெரிவித்தால் மேலும் பல உறவினர்கள் என்பிள்ளை எங்கே என்றுக் கேட்க இடமுண்டு. விடுதலைப்புலிகளின் இயக்கத்தில் இருந்தப் போது ஒரு உறுப்பினர் இயக்கத்தில் வகித்தப் பாத்திரம் என்ன என்ற விடயத்தை இன்னொரு சக உறுப்பினரே அரப் படையினரக்குத் தெரிவித்திருக்கிறார். அதனடிப்படையிலேயே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. எதையுமே வெளிப்படுத்தக் கூடாதென்ற உளப்பூர்வமாக உறுதிப்பெற்றவர்கள் மூலம் உண்மைகளை கண்டறிய இராணுவத்தினர் எந்த உத்திகளைக் கையாண்டனரோ தெரியவில்லை. இந்த விடயங்களில் அவிழ்க்க முடியாதப் பல முடிச்சுக்கள் இன்றும் இருக்கின்றன. எது எப்படி இருப்பினும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எப்படி காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றனர் என்பதை நல்லாட்சி அரசாங்கம் கண்டுப்பிடிக்க பல வழிவகைகள் இருக்கின்றன. ஏனெனில் கொலைகள், களவுகள், மோசடிகள் அம்பலத்துக்கு வந்துள்ள நிலையில் அரசாங்கத்தினால் கண்டறிய முடியாதென எந்த நியாய புத்தியுள்ள பிரஜையும் ஏற்றுக்கொள்ள தயங்குவார்.

உறவினர்களால் பிள்ளைகளைக் கையளத்த வேலையில் அங்கே கடமையில் இருந்த இராணுவத்தினர் இப்போது எங்கே உள்ளனர் என்பது அரசுக்குத் தெரியாதென்று கூறமுடியாது. இப்போது தமிழ் உறவினருக்குத் தேவைப்படுவது பிள்ளைகளுக்கு என்ன நடந்ததென்பதே. அரசாங்கத்துடன் உறவு நிலையைப் பேணி வரும் ஒட்டுண்ணிகள் அரசுக்கு வக்காளத்து வாங்கி வருகிறது. யுத்த காலத்தில் அப்போதைய அரசுடன் உறவு நிலையைப் பேணியவர்கள் கூட இப்போது தமிழ் மக்களின் இரட்சகர்களாக மாறி ஏதேதோ பிதற்றுகின்றனர். யுத்தம் முடிவுக்குக் கொண்டுவர உதவியவர்கள் தமிழ்ப் பாமர மக்களைக் காப்பாற்ற தவறிவிட்டனர். இன்று தமிழ் பாமர மக்களுக்கு வேண்டியதைச் செய்ய எவராலும் முடியாத கையறு நிலையில் உள்ளனர்.

யுத்த வேளையில் நடந்த கசப்பான சம்பவங்களை மறந்துவிடுவதற்கான நிலையில் இன்று தமிழ் மக்கள் இல்லை. இதுவம் நல்லாட்சி என்று சொல்லப்படும் அரசாங்கத்துக்கும் தெரியும். இன்றுள்ள உடனடியான தமிழ் மக்களின் கோரிக்கைகளில் 50 வீதத்தைத்தானும் நிவர்த்தி செய்ய இக்ககூட்ரசினால் முடியாது. தமது ஆட்சியை தக்கவைத்துக் கொள்வதற்கு மட்டும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கின்றன. அரசுத் தலைவர்கள் அடிக்கடி தமிழ் மக்கள் வாழும் வடக்குக் கிழக்குக்கு விமானத்தில் பறக்கின்றனர். அங்கே அவர்கள் தமிழ் மக்களைத் திருப்திபடுத்தும் விதமாகச சில வாக்குறுதிகளையும் அழிக்கின்றனர். பானையில் அகப்பையை மாத்திர் வைத்துக்கொண்டு மிக விரைவில் கிள்ளித் தருகிறோம் என்பது போல அவர்களது உரை அமைந்தவிடுகிறது. அங்குள்ள அவர்களது எடுபிடிகளும் மேடைகளில் தோன்றி மக்களுக்கு படம் காட்டுகின்றனர். இப்படிப்பட்ட அமைப்புமுறை இனிமேல் வேண்டுமா? என்று உழைக்கும் வர்க்கம் சிந்திக்க வேண்டும்.

# தமிழ் அரசுக் கட்சியின் புதிய வியூகம்

தமிழ்த் தேசிய அரசியலின் இன்றைய போக்கில் தமிழ் மக்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டிருப்பது யாவரும் அறிந்ததே. ஏனெனில் ஜனாதிபதித் தேர்தல் காலத்திலும் சரி பாராளுமன்றத் தேர்தல் காலத்திலும் சரி தென்னிலங்கை அரசியற் தலைமைகள் முன்பு போலல்லாது முதலாளித்துவ அமைப்பு முறையைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அரசியற் கட்சிக் கூட்டுகள் அமைந்துள்ளன. ஐ.தே. கட்சியானது ஐக்கிய தேசிய . முன்னணி என்றும் ஸ்ரீ.ல.சு கட்சி ஐ.மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு என்றும் இரு பிரிவுகளாக நின்று தேர்தலைச் சந்தித்திருந்தன. ஐ.தே.கட்சியுடன் மலையக முக்கூட்டு முன்னணி என்ற முக்கூட்டுக் கட்சிகளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் அதனுடன் கூட்டுச் சேர்ந்த முஸ்லிம் கட்சி. ம.ஜ. முன்னணி தேசிய சுதந்திர முன்னணி ஹெல உறுமய போன்ற கட்சிகளும் இணைந்து ஐ.ம.சு.மு. என்ற பெரும் கூட்டமைப்பு என்ற பெயருடன் தேர்தலுக்கு கொடுத்திருந்தன தனித்து ஆட்சியமைக்க முடியாமையால் ஐ.தேசியக் கட்சிக்குப் பலத்தை ஐ.ம.சு. கூட்டமைப்பின் 40 உறுப்பினர்கள் வழங்கியிருந்தனர் அதனுடைய நோக்கம் தமது வர்க்க நலன்களையும் வரப்பிரசாதங்களையும் பெற்றுக் கொள்ளும் நோக்கமே ஆகும். ஆயினும் 2/3 ற்குரிய பலத்தை அரசாங்கத்திற்கு வழங்கியிருக்கவில்லை.

கடந்த மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் ஐ.தே. கட்சியிலிருந்து பாய்ந்து சென்று 2.'.3 ற்கான பலத்தை வழங்கித் தமது வரப்பிரசாதங்களையும் வர்க்க நலன்களையும் பெற்றுக் கொண்டனர். ஆனால் நாட்டு மக்களை கடன் சுமையிலும் இருட்டு வாழ்க்கையிலும் தள்ளிய பெருமையைப் பெற்றுக் கொண்டனர். அதிலிருந்து மக்களை மீட்பதாகக்கூறிப் பதவியைப் பெற்றுக்கொண்டவர்களும் அதே பாதையிலேயே பயணிக்கின்றனர். வடக்குக் கிழக்குத் தமிழ்த் தேசியத் தலைமை ஆட்சியினருக்கு எவ்வகையிலும் உதவத் தேவையில்லை என்ற நிலையில் தாமும் ஒட்டியுறவாடித் தமது வர்க்க நலன்களைப் பெற்றுக் கொள்ள முற்பட்டுள்ளனர். வேலையற்ற தமிழ் பட்டதாரிகளின் போராட்டம் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர் நடாத்தும் போராட்டம் நில மீட்புப் போராட்டம் ஆகிய பிரதான போராட்டங்கள் சூடுபிடித்துள்ள நிலையில் தமிழ்த் தேசியத்தலைமை தமது கையாலாகாத் தனத்தை வெளிக்காட்டியுள்ளது. அதனூடாக இவர்கள் யார் என்ற உண்மை புலனாகியுள்ளது. இவர்களிற் சில உறுப்பினர்களுக்கு மட்டும் இந்த வர்க்கத்தினரால் எந்தப் பிரச்சினையும் தீர்க்க முடியாதென்பது புலனாகியுள்ளது. இருப்பினும் தமிழ்த் தேசியம் என்ற அரசியலிருந்து இவர்களால் மீள முடியவில்லை.

70 வருட தமிழ்தேசிய அரசியல் வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால் தமிழ்ப் பாமர ஒடுக்கப்பட்ட வர்க்க மக்களின் பக்கத்தில் நின்று குரல் கொடுத்த வரலாறும், அம்மக்களின் விடுதலைக்கு வர்க்க மாற்றமே வேண்டும் என்றும் எக்காலத்திலும் குரல் கொடுக்கவில்லை. எஸ்.ஜே. வி. செல்வநாயகம் சரி காங்கேசு கணபதி பொன்னம்பலமாயினும் சரி இவர்களின் அரசியல் பாதையில் அடியொற்றிவந்தவர்களும் சரி மேட்டுக்குடி வர்க்க நிலைப்பாட்டிலிருந்து கீழிறங்கியதும் இல்லை. இறங்கப் போவதுமில்லை. இந்தலட்சணத்தில் இதுவரை இருந்து வந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு என்று புலிகளால் அமைக்கப்பட்ட கட்சிகளின் கயிறிழுப்பும் கழுத்தறுப்பும் அரங்கேறிக்கொண்டிருப்பது சகல தமிழ் மக்களுக்கும் தெரிந்த விடயம். இவர்களுக்குத் தமிழ்ப் பெரும்பான்மை மக்கள் படும் அவலங்கள் எவையென்பது கூடத் தெரியாது. இவர்களுக்குப் பல பெயர்களுடைய கட்சிகள் தேவைதானா? என்பதும் பிரதான கேள்வியாகும். வடக்குக்கிழக்கின் தமிழ் மக்களில் 75 வீதமான மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பல கட்சிகள் தேவைப்படுகின்றனவா? ஒவ்வொன்றிற்கும் தத்துவார்த்தக் கோட்பாடுகள் வகுக்கப்பட்டிருக்கின்றனவா? என்பதுவும் கேள்விக்குறியே கடந்த காலத்தில் இந்தியா கொடுத்திருந்த ஆயுதங்களின் மூலம் வெறும் பிரபலம் அடைந்த லும்பன் கூட்டங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி 11ம் பக்கம்...

## 1ம் பக்கம் தொடர்ச்சி.. அரசாங்கம் அடக்குமுறை....

நடவடிக்கைகள் முன் அரசு தோல்வியை ஏற்றுக்கொண்டது. பொருளாதார நெருக்கடியின் ஆழத்தில் மூழ்கியுள்ள அரசாங்கம் இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நம்பியிருக்கும் ஒரே மார்க்கம் அரச வளங்களையும், இயற்கை வளங்களையும் விற்பதே ஆகும். அதேபோன்று அரச செலவுகளை குறைப்பதற்காக இலவசக் கல்வியையும், இலவச சுகாதாரச் சேவையை துண்டிப்பதற்கும் அரசுக்கு தேவைப்படுகின்றது. இந்த அனைத்து நடவடிக்கைகளும் நேரடியாக தொழிற்சங்கங்களின் மற்றும் பொதுமக்களின் தேவைகளுடன் தொடர்புள்ளதால் இவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மக்கள் சக்திகளை அச்சுறுத்தி அல்லது அவற்றை முடக்கி இக்கண்டன நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதே அரசாங்கத்தின் குறிக்கோளாகும்.

ஆர்பாட்டங்களை கட்டுப்படுத்துவதற்கு அரசு முயற்சித்தால் ஆர்பாட்டங்களை நடத்துவதற்குள்ள உரிமையைக் கோரியும் மக்கள் ஆர்பாட்டம் செய்யவேண்டிய நிலை ஏற்படும். அதேபோன்று ஆர்பாட்டங்களை அடக்குமுறை செய்வது ஐக்கிய தேசிய கட்சியின் பழக்க தோஷ மாக காணப்படுவதோடு முன்னைய காலங்களில் மக்கள் எதிர்ப்புகளை ஒடுக்குவதற்கு காடையர், குண்டர் களின் உதவிகளைப் பெற்றுக் கொண்டாலும் தற்போதைய வலிமையற்ற அரசாங்கம் தமக்குக் கிடைத்துள்ள மக்கள் ஆணையை நினைவில் எடுக்க வேண்டியுள்ளது. நல்லாட்சியை அமைப்பதாக வாக்குறுதியளித்தே இந்த அரசாங்கம் பதவியேற்றது. அரசாங்கம் இவ்வாறு அடக்குமுறைக்கு தயாரானால் கடந்த மகிந்த ஆட்சிக்கு ஏற்பட்டதைப் போன்று இந்த அரசாங்கத்துக்கும் மக்கள் உரிய பாடத்தை கற்பிப்பார்கள் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் தோழர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

## 9ம் பக்கம் தொடர்ச்சி.. இ.தொ.கா.வின் புதிய பயணம்....

சம்மேளனத்தின் ஒப்பந்தத்தில் கையொப்பமிடத் தேவையில்லை நாட்டின் தலைமைத்துவ அரசியல் தொழிலாளர் வர்க்கத்தினுடையதாக்க உழைக்க வேண்டும். மந்திரிப் பதவியென்பது ஒருவருக்கான கௌரவப்பதவியாகும் அதனூ டாகத் தொழிலாளர் வர்க்கத்தின் பிரச்சினைகள் யாவும் தீர்ந்துவிடப்போவதில்லை. ஆட்சிகள் மாறி மாறித் தொழிலாளர் வர்க்கத்தின் உழைப்பை உறிஞ்சி ஏப்பம் விட்டுக்கொண்டிருக்கின்றன. அவர்களுக்கான எல்லாப் பிரச்சினைகளையும் முதலாளி மார் சம்மேளனமும் தொழிற்சங்கத் தலைவர்களும் தீர்ப்பார்கள் என்று அரசாங்கங்கள் தப்பித்து விடுகின்றன. அவர்களின் ஆட்சிக்கு தொழிலாளர்களின் வாக்குகள் அள்ளி வழங்கப்படுகின்றன. ஆனால் 200 வருட பழைமை வாய்ந்த லயன் அறைகளில் இன்றும் குடித்தனம் நடத்துகின்றனர். முதலாளிமார் சம்மேளனம் தோட்டங்களின் காரியாலய ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கி அவர்களைத் திருப்திப்படுத்தி வைத்துள்ளது. தொழிலாளருக்கான சம்பள உயர்வு வழங்க முடியாமைக்கான காரணம் ஊழியர்களினதும் தொழிற்சங்கத் தலைவர்களினதும் அசிரத்தையேயாகும். இவர்களின் காட்டிக் கொடுப்பு நீண்டகாலத்திற்கு நீடிக்கும் என்று எண்ணிவிட முடியாது. அரச தொழிலாளராக மாற்றியமைக்கும் வேலைத்திட்டம் கொண்ட ஆட்சியே அமைய வேண்டும் அதற்காக உழைக்கும் வர்க்கத்தினர் நாடு தழுவிய ரீதியில் ஐக்கியப்பட வேண்டும்.

கடந்த ராஜபக்ஷ ஆட்சியின்போது வழங்கப்பட்ட கூரைத்தகரங்கள் சீமெந்துப் பைக்கட்கள் மக்களுக்கு வழங்கப்படவில்லை என்று ஆறுமுகம் தொண்டமான் மீது மக்கள் சந்தேகத்தை வெளிப்படுத்தியிருந்தனர். அப்படிப்பட்ட தலைவர் பக்கத்தில் மக்கள் திரளாகக் கலந்து கொண்டது ஏனெனில் இனிமேலாவது தங்களுக்கு ஏதாவது உதவி பெற்றுத்தருவார் என்ற நம்பிக்கையினாலாகும். தயாசிறி ஜயசேகர பா.உ. அவர்கள் தமது 2020ல் ஏற்பட இருக்கும் சு.க. ஆட்சியில் 500 சம்பள உயர்வு வழங்குவோம் என்று கூறியிருந்தால் வரவேற்ககூடிய விடயம் எனலாம். ஆனால் அவர் அப்படிக்கூற மாட்டார் என்பது எந்தச் சிறு பிள்ளைக்கும் விளங்கும் ஆறுமுகன் தொண்டமானின் தொழிற்சங்கத்தில் முட்டாள் கூட்டம் மட்டும் தான் இருப்பார்கள் என்று தயாசிறி ஜயசேகர பா.உ. அவர்கள் நம்பியுள்ளார்.

தயாசிறி ஜயசேகர அவர்கள் மலையக மக்களுக்கு வாக்குரிமை கிடைக்க சௌமிய மூர்த்தி தொண்டமான் வீதியில் இறங்கிப் போராடியதால் அவர்களுக்கு வாக்குரிமை கிடைத்ததாகச் சரித்திரம் கூறியுள்ளார். எத்தனை இடது சாரித்தலைவர்கள் அதற்காகப் போராடினார்கள் என்ற சரித்திரத்தைக் கூற அவர் மறுத்துவிட்டார். இதிலிருந்து இவர் வர்க்க பாசத்தை மட்டுமே கொட்டியுள்ளார். ஆனால் சரித்திரம் தெரிந்த மலையக மக்களுக்குப் பூச்சுற்றியுள்ளார். ஆறுமுகம் தொண்டமானை மலையக மக்களின் உரிமைப் போராட்ட வீரராக ஆக்கியதன் மூலம் தமது இருப்பிற்கு மலையக மக்களைப் பகடைக்காய்கள் ஆக்கியுள்ளார் தமது வருங்கால ஆரூட ஆட்சி ஏற்படுமா? என்று சிந்திப்பதே அவருக்கும் தொண்டமானுக்கும் நன்மை பயக்கும்.

## 05ம் பக்கம் தொடர்ச்சி.. ஒற்றுமை எதற்காக....

உள்ள ஒற்றுமைக்காகவே செயற்பட வேண்டும். முதலாளித்துவத்தைத் தோற்கடித்துப் புதிய சோஷலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் உழைக்கும் மக்கள் ஆளும் வர்க்கமாக மாற்றுவதற்கு வர்க்க ஒற்றுமை அத்தியாவசியமானதாகும். மிகத்தெளிவான நோக்கத்தின் அடிப்படையில் சரியான கொள்கையின் அடிப்படையில் அமைப்பு ரீதியான கண்ணோட்டத்துடனான ஒற்றுமை அத்தியாவசியமானதாகும். அவ்வாறு அத்தியாவசியமான நமது வர்க்கத்தின் ஒற்றுமைக்கு இடையூறு செய்வோர் முதலாளித்துவ சந்தர்ப்பவாதிகளாகும். அதனால் உழைக்கும் மக்கள் உள்ளிட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் முதலாளித்துவக் கட்சிகளிடமிருந்து வெளியேறி முதலாளித்துவக் கண்ணோட்டத்தில் இருந்து அகன்று பாட்டாளி வர்க்க கண்ணோட்டத்துடனான ஒரு வர்க்கமாக அமைப்பு ரீதியாக அணிதிரளவேண்டும். பாட்டாளி வர்க்கத்திற்குச் சரியான வழிகாட்டுதலில் மக்கள் விடுதலை முன்னணி பிரதான பங்கு வகிக்கிறது. இவ்விடயத்தை இலங்கை மக்கள் சரியாகப் புரிந்து செயற்பட வேண்டும். அதனால் மே 1ம் திகதி மேடைகளிலும் மேதின சுவரொட்டிகளிலும் பொதுவாக ஒற்றுமையைப் பற்றிப் பேசும் முதலாளித்துவ வர்க்கத்தினதும் சந்தர்ப்பவாதிகளினதும் போலி வார்த்தைகளுக்கு ஏமாறாது நாம் ஒரே வர்க்கமாக ஒன்றுபடல் வேண்டும். அது உண்மையான மக்கள் ஆட்சிக்காகவும் முதலாளித்துவத்தை தோற்கடித்து - சோஷலிசத்தை நிலைநாட்டுவதற்காகவுமே ஆகும். அதனால் குறிக்கோளின்றி பழைய பழக்கதோசத்திற்கு ஏற்ப அதிகாரத்திற்கும் முதலாளித்துவ எண்ணக் கருவினதும் தாக்கம் காரணமாக முதலாளி வர்க்கத்தின் பின்னால் ஓடுவதை நிறுத்தி நமது வர்க்கம் ஒரே வர்க்கமாக அணித்திரண்டாகவேண்டும். முதலாளி வர்க்கத்தினால் மக்களுக்கு எதையும் பெற்றுக் கொடுக்க முடியாது. அதனால் அந்த முதலாளித்துவத்தை தோற்கடித்து புதிய சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டியது பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையினாலாகும். அவ்வாறான ஒற்றுமை அதாவது வர்க்கத்தின் ஒற்றுமையானது ஒற்றுமை என்ற வார்த்தைக்கு வர்க்க ரீதியிலான விளக்கத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டியிருப்பது அதனாலாகும்.

## 10ம் பக்கம் தொடர்ச்சி.. தமிழ் அரசுக் கட்சியின்....

உலகின் சர்வதேச அரசியல் எங்கே செல்கின்றது என்று கூட விளங்கிக் கொள்ளாமல் மீண்டும் மீண்டும் கடந்த தமிழ் அரசியற் தலைமைகள் சென்ற அதே பாதையில் பயணித்து தமிழ் மக்களை இழுத்துச் செல்கின்றன. இனத்திற்கான தனித்துவம் அடைந்து விடுவது சுலபமான காரியமல்ல இன்றைய அரசியல் நிலையில் இன்னொருவருக்கான தேவையே மேலோங்கி நிற்கிறது. இன்னொருவரின் தேவைக்கான வகையில் இன விடுதலை பெற முடியும். எண்ணெய்ச் சட்டிக்குள் இருந்து அடுப்பிற்குள் தமிழ் மக்களை வீழ்த்தும் நிலையும் ஏற்பட இடமுண்டு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இழுபறியில் தனித்தனியாகப் பிரிந்து தேர்தலுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் முன்னாள் போராளிகளின் அமைப்பினருடன் கூட்டுச் சேர்ந்து அவர்களின் நிழலில் தமிழரசுக்கட்சி தஞ்சமடைய எண்ணியுள்ளது. முன்னாள் தமிழ்ப் போராளிகள் அமைப்பினர் சரியான திசையில் செல்ல வேண்டுமானால் தமிழ் மேட்டுக் குடித் தலைமைகள் கையாண்ட வழிமுறைகளிலிருந்து வேறுபட்ட திசையில் செல்ல வேண்டும். மாவீரர் குடும்பங்கள், அங்கவீனர் குடும்பங்களின் வாழ்வு மேம்பாட்டிற்கும் ஒடுக்கப்பட்ட பாமர மக்களுக்காக குரல் கொடுக்கும் அமைப்பாகவும் அவர்களுக்குச் சேவை செய்வதற்காகவும், தமது தேட்டங்களில் நாட்டம் செலுத்தாது சேவை செய்வதற்காகவும், தமது தேட்டங்களில், நாட்டம் செலுத்தாத அமைப்பாகவும் செயற்பட்டால் தமிழ்ப் பாமர மக்களுக்குப் பேருதவியாக அமையும். முன்பு போராளியாக இருந்த காலத்தில் பெற்றிருந்த அர்ப்பணிப்பையும் தியாகத்தையும் நினைவிற்கொள்ள வேண்டும் அவற்றைக் குறைத்து மதிப்பிடத் தமிழ் மக்கள் தயாரில்லை. தலைமை விட்டதவறு வேறுவிடயம் தங்கள் மூலம் குளிர்காய எத்தனிக்கும் அரசியற் கயவர் கூட்டத்தினருடன் எவ்வகையிலும் உடன்பாடு இருக்கக்கூடாது ஏனெனில் மீண்டும் மீண்டும் அந்நிய நாடுகளுக்குப் பின்னால் அடிவருடும் செயற்பாட்டிற்குப் பங்குதாரர்களாகத் தமிழ் மக்கள் முன் விடுதலைப் புலிகளை அம்பலப்படுத்தித் தங்களை இரட்சகர்களாக்கிக் காட்ட எத்தனிப்பர். நேர்மையான ஒரு தலைமை மட்டுமே தமிழ் மக்களுக்குத் தேவை. இனிவரும் காலங்களில் உழைக்கும் வர்க்கத்தின் பக்கத்தில் நின்று செயற்பட வேண்டும். இலங்கையின் தேசியம் இந்நாட்டின் சகலருக்கும் உரியதாகும் பாட்டாளி வர்க்கத்திற்கான தேசியம் இன்றுவரை இந்த நாட்டில் நிலைநாட்டப்படவில்லை தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்திற்கே தமிழ்த் தேசியம் வேண்டும் தமிழ் மேட்டுக் குடித்தலைமைகள் அதற்கு இடம் கொடுக்க முன்வர மாட்டாது. தமிழர் பண்பாடு, கலாச்சாரம் இன்று செல்லும் திசையை இடை நிறுத்த முன்னாள் போராளிகளால் மட்டுமே முடியும். ஏனெனில் வி. புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களில் மொழி, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றில் எவரும் குறை கூற இடம் இருந்ததில்லை. ஆனால் முதலாளித்துவ ஜனநாயகம் கூட அங்கிருக்கவில்லை என்பது மட்டும் உண்மை. தமது சர்வாதிகார நடவடிக்கைகளினாலும் தான் தோன்றித் தனத்தினாலும் எதிரியின் வலிமையை உணராததாலும் அவல முடிவைச் சந்தித்தனர். இலங்கைப் பாட்டாளி வர்க்கம் மீட்கப்பட்டுத் தமிழ்ப் பிரதேசங்களில் வாள் வெட்டுப்படையோ பாலியற் கொலைகளோ கள்வர் கூட்டமோ எழுவதற்கு நியாயம் இல்லாமலிருந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மக்கள் விடுதலை முன்னணியினால் 2017 மேதினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் நடத்தப்பட்ட நிகழ்வுகளின் நிழற்படங்கள்


























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தரமுள்ள, பெலவத்த, பன்னிபிட்டிய வீதி,464/20ல் வசிக்கும், எம். ரில்வின் சில்வா ஆகிய நான் இலக்கம் 43/20, நுககஹ பிளேஸ், பிலியந்தலை வீதி, மகரகமவில் அமைந்த நியமுவா வெளியீடு நிறுவனத்தில் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.